பதிவு எண் M. 4900

16 பக்கங்கள்.

# குடி அரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு „ ரூ. 9-0-0. „ 0-2-6.

மாலை 22 } ஈரோடு 9-7-1949 சனிக்கிழமை } மலர் 44.

## என்ன சமாதானம்?

★

கடவுள் என்ற வார்த்தை ஒரு குறிப்பற்றதாய் இருந்துவருகிறது.

கடவுள் என்ற வார்த்தை தோன்றி எவ்வளவு காலம் இருக்கும் என்று யாராலும் சொல்ல முடியாது.

அப்படியிருந்தும் கடவுள் என்றால் என்ன? என்று இன்று எப்படிப்பட்ட ஆஸ்திகராலும்சொல்ல முடிவதில்லை. ஆகவே ஒவ்வொரு ஆஸ்திகனும், தனக்குப் புரியாத ஒன்றையே— தன்னால் தெரிந்து கொள்ள முடியாததும், பிறருக்கு விளக்க முடியாததுமான ஒன்றையே, குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டு கடவுள் என்று கட்டி அழுகிறான்.


கடவுளுக்கு லக்ஷணமோ, இலக்கியமோ, குறிப்போ ஏதாவதொன்று விளக்கமாய்ச் சொல்லக்கூடியநிலைமை ஏற்பட்டிருந்தால், இவ்வளவு காலத்துக் குள்ளாகக் கடவுள் சங்கதியில் இரண்டிலொன்று, அதாவது உண்டு, இல்லை என்கின்ற ஏதாவது ஒரு முடிவுக்கு உலக மக்கள் வந்திருப்பார்கள்.

கம்பர்கூட சீதையின் இடையை வர்ணிக்கும்போது, "சீதையின் இடையானது கடவுள்போல்இருந்தது" என்று வர்ணிக்கிறார். அதாவது கடவுள் எப்படி "உண்டோ, இல்லையோ" என்பதாகச் சந்தேகப்படக்கூடியதாய் இருக்கின்றதோ, அதுபோல் சீதையின் இடையானது கண்டுபிடிக்கமுடியாத அவ்வளவு நுண்ணியதாய் இருக்கிறது என்று கூறினார்— கம்பரை நாஸ்திகர் என்று யாரும் சொல்லமாட்டார்கள்.

மக்களுள் பெரும்பாலோரும் ஆஸ்திகர்கள் எல்லோரும், தங்கள் குற்றங்களுக்கும், தங்கள் துர்க்குணங்களுக்கும், தங்கள் தரித்திரத்துக்கும், துன்பத்துக்கும் தாங்களே காரணமென்று வருந்தி அவற்றைப் போக்கும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறார்கள்.

இந்துக்கள் கடவுளை ஒரு மனிதனைப்போலவே கற்பித்துக் கொண்டு அதிலும் ஒரு செல்வம் பொருந்திய மனிதனாய்க் கற்பித்துக்கொண்டு, அதற்கு மனிதனைப் போலவே வீடு, வாசல், பெண்டு, பிள்ளை, பலபெண்டு, பல வைப்பாட்டி, உடை, ஆகாரம், வாகனம் ஆகியவைகளைக் கொடுத்து வருகிறார்கள்.

மற்ற கிருஸ்து, முஸ்லீம் ஆகிய மதஸ்தர்களும் கடவுளை மனிதன் போலவே கற்பித்து, அக்கடவுளுக்கு நன்மை, தீமை, விருப்பு, வெறுப்பு, சந்தோஷம், கோபம் ஆகியகுணங்களைக்கற்பித்துத்தன்னை வணங்கியவனுக்கும், தன் இஷ்டப்படி நடந்தவனுக்கும் நன்மையளிப்பதும், தன்னை வணங்காதவனுக்கும், தன் இஷ்டப்படிநடக்காதவனுக்கும், தீமையளிப்பதுமான குணத்தைக் கற்பித்திருக்கிறார்கள்.




சர்வசக்தியுடைய பூரணத்தன்மை பெற்று, எங்கும் நிறைந்திருக்கிற ஒருகடவுளுக்கு மோக்ஷம் நரகம் எதற்கு?

கடவுள் இஷ்டத்துக்கு விரோதமாய் நடக்கும்படியான சந்தர்ப்பம் மனிதனுக்கு எப்படி வரும்?

உலகத்தில் தீமை எப்படி உண்டாயிற்று? அதை யார் கற்பித்தார்கள்? தீயகுணம் மனிதனை அடையக் காரணமென்ன?

தீயதைச் செய்துவிட்டுக் கடவுளை வணங்குவதாலோ, பிரார்த்திப்பதாலோ அதன் பயன் எப்படி அதிகரிக்கப்பட்டுவிடும்? தீமையினால் துன்பம் அடைந்தவனுக்குப் பரிகாரம் எப்படி ஏற்படும்? தீமை செய்தவர்கள் கடவுளை வணங்கிப் பிரார்த்திப்பதின் மூலம், தீமைக்குண்டான பலனை அனுபவிக்கமுடியாமல் போய்விடுவார்கள் என்றால், தீமை எப்படி? எப்பொழுது உலகைவிட்டு அகல்வது?

எத்தனையோ கோடிக்கணக்கான வருடங்களாகக் கோடிக்கணக்கான மக்கள் தீமைக்காக மன்னிக்கப்பட்டும், தீமைக்காகத் தண்டிக்கப்பட்டும், உலகில் இன்றும், நாளையும், இனியும் வெகு காலத்துக்கும், தீமை இருந்து கொண்டே வருகிறது என்றால் இதுவரையும், தண்டனையும் மன்னிப்பும் என்ன பலனைக் கொடுத்துவந்திருக்கின்றன.

தீமையின் கொடுமையை மக்கள் அனுபவிக்காமல் இருப்பதற்கு

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

# காளியின் கருணை?

★

(சென்ற இதழ் தொடர்ச்சி)

"என்ன நானா, நாஸ்தீகப்பிரச்சாரம் செய்கிறேன்! அபாண்டமாச் சொல்லாதேப்பா, நான் இன்னும்— காங்கரசிலே —விலையாகிற பண்டமப்பா...... வேண்டுமானால் நான் கட்டுரையின் ஆரம்பக்கட்டத்தில் எழுதியுள்ள, "ஆகையால் இந்த நாளில் திராவிடக் கழகத்தாரும் மற்றவர்களும் செய்வதாகச் சொல்லப்படும் நாஸ்தீகப்பிரச்சாரத்தைக் குறித்து நான் சிறிதும் கவலைப்படவில்லை''......என்ற வாசகங்களை திருப்பித்திருப்பி படியப்பா'' என்று கல்கியே நாம் கூறியது கேட்டு தம் ஏட்டின் மூலமாக நமக்குக் கூறலாம்!

ஆனால் நாம் மறுமுறையும் கூறுகிறோம் கல்கி கட்டுரையில் நாஸ்தீகப்பிரச்சார வாடை வீசுகிறது என்று!

பக்தர்களைத்தான் பகவான் சோதனைசெய்து, துன்புறுத்தி இறுதியில் இரக்கங் காட்டுகிறார். பக்தர் அல்லாதாரை பகவான் நெருங்கி துன்புறுத்துவதில்லை என்ற கருத்தை......... "கதாநாயகன் காளி மாதாவிடம் பக்தி செலுத்திக்கொண்டிருந்தான். காளிகோயிலுக்குப் போய் வழிபட்டு வந்தான். அவனுடைய சிநேகிதன் மணி அதைக் குறித்து அவனைக் கேலி செய்துவந்தான்'' என்று கல்கி எழுதுவதிலிருந்து...... கதாநாயகன் காளி பக்தனாக இருந்தும், காளி இவனுக்குத்தான் கஷ்டம் கொடுக்கிறாளே தவிர காளியை இறுதிவரை கேலிசெய்து வந்த மணிக்கு கஷ்டம் ஏற்படும்படி செய்தாளில்லை! மணி இறுதிவரை மகிழ்வுடனேயே காலங் கழிக்கிறான்.

தன்னைத் தூற்றும் மணியைப் பற்றிக் கவலை எடுத்துக்கொள்ளாத காளி, தன்னைப் போற்றும் கதாநாயகனை மென்மேலும் துன்புறுத்துவது ஏன்!

பக்தர்களிடந்தான் காளியின் சாதனையும் சோதனையும்—மற்றவர்களை காளி நெருங்கவே மாட்டாள் என்பதாகத்தானே ஆகிறது!

பகவானின்—பக்தனாகி பல துன்பங்கள் அனுபவித்து இறுதியில் இன்பமடைவதைவிட—பக்தனல்லாதிருந்து காலத்தை ஓட்டினால் என்ன—எப்பவும் இன்பந்தானே, என்று யாருக்கும் எண்ணத்தானே தோன்றும்.

"கடைசியில் கதை சுபமாகவே முடிகிறது. வேலைக்காரி தன் எஜமானரின் மகனையே மணந்து கொள்ளுகிறாள். கதாநாயகனும் அவன் மனைவியும் சமரசமடைந்துவிடுகிறார்கள். எல்லாம் காளியின் கருணைதான்'' என்ற கல்கியின் எழுத்தோவியம் ......மணி அல்லாத மற்றோர்கள் காளி பக்தர்கள் ஆகவே அவர்கள் எல்லோரையும் கஷ்டத்திலாழ்த்தியே இறுதியில் இன்பம் நல்குகிறாள். மணி காளி பக்தன் அல்ல! ஆகவே காளி அவனை நெருங்கவுமில்லை—இன்னல் சூழவுமில்லை—இன்பமாகவே இருக்கிறான்.....என்ற கருத்தைத்தான் மென்மேலும் வலுப்படுத்துகிறது!

மணியைப்பற்றி கல்கி எழுதும்போதுகூட "காளியைக் கேலி செய்துகொண்டிருந்தான்'' என்ற அளவிலேதான் குறிப்பிடுகிறாரே தவிர......மணியின் செய்கையைக் கண்டு காளி கோபங்கொண்டு அவனையும் கஷ்டத்திலாழ்த்தினாள் ...என்று எழுதவில்லை—எழுத இடமில்லை!

ஆகவே! பக்தரல்லாதாரை பகவான் பயமுறுத்துவதில்லை, என்ற இங்கர்சாலின் தத்துவம் வேறு வடிவிலே கல்கியின் கட்டுரையில் காட்சி தருகிறது!

இதன் காரணமாகவே நாம் அவரின் கட்டுரையில் நாத்தீக வாடை வீசுகிறதெனக் குறிப்பிட்டோம் என்பதைக் கிழ்ப்பாக்க நாதர் இப்போதாவது உணரவேண்டும்.

ஆகவே...கல்கி வேலைக்காரி பற்றிக் கிண்டலுடன் கேட்ட ஒவ்வொரு கேள்வியும் இப்போது நம்மவர் கிண்டலுக்கு ஆளாகிறது.

அவர் கூறிவந்த கருத்துக்கள் ஒன்றிலாவது நியாயத் தெளிவு இருப்பதாகக் கண்டோமில்லை!

இந்த முறையில் தன் கட்டுரை வரிசையைத் தொடர்ந்துவந்த கல்கி—கட்டுரையின் முடிவில் குறிப்பிட்டுள்ள செய்தி நமக்கே ஆச்சரியத்தையூட்டுகிறது!

"தீங்கு விளைவிக்கக்கூடிய சினிமாப் படங்கள், பக்திப் படங்கள் என்றும் புராணப் படங்கள் என்றும் பெயர் சூட்டிக்கொண்டுவரும் ஆபாசம் நிறைந்த படங்களே!..... சர்க்கார் தலையிட்டுத் தடுப்பதாயிருந்தால் அத்தகைய ஆபாசப் புராணப் படங்களையே தடை செய்யவேண்டும்.''

என்றுஇதுபோல கருஞ்சட்டை அல்லாத கல்கி கூறுவது நம்மை எண்ண அலையிலேயே மிதக்க வைக்கிறது.

சில காலத்திற்கு முன்பு "மீரா'' என்ற திரைப் படத்துக்கு வசனம் எழுதிய அதே கல்கிதான் இன்று பக்திப் படங்கள் நாட்டுக்குக் கேடு பயப்பவை என்று எழுதுகிறார்.

மீரா! கல்கியின் சொந்தப் படமோ என்று எண்ணிடும் அளவிற்கு மீராபற்றிய புகைப்படங்களும்—விமர்சனங்களும் அப்போதைய கல்கி இதழ்களில் வெளியாயின.

அழகும் அறிவும் நிரம்பிய மீரா —என்ற கல்லூரி மாணவியை ராணா என்கிற கிழவனுக்கு மணம் செய்துகொடுக்கிறார்கள். ராணாவின் கொடுமையைத் தாங்கமுடியாத மீரா—தான் கல்லூரியில் காதலித்த கிரிதாரியுடன் ஓடி—புது வாழ்வு துவக்கிறாள்..........என்ற முறையில் மீரா கதை சமூகச் சித்திரமாக அமையவில்லை!

கட்டிய கணவன் ராணா கட்டழகோடு தன் அருகே இருக்கும் போது—அவனை வெறுத்து கிரிதா கோபாலனைத் தேடி ஓடிய மீரா கதைக்குத்தான் நம் கல்கி வசனம் தீட்டினார்!

பொருந்தா மணம் புரிந்து பொழுது முழுதும் பூவையைச் சிறை வைத்தால்—அவள் என்றாவது ஓடிவிடத்தான் முயற்சி செய்வாள் என்ற கருத்து நாம் தீட்டிய "கல்லூரி மீராவிலே காட்சி தருகிறது.

ஆனால் கல்கி வசனம் தீட்டியுள்ள மீரா கதை!......கட்டழகன் ராணா மீராவிடம் காதல்மொழி பேசி வரும் போது, "காற்றினிலே

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

# கடவுள் உலகில் கருச்சிதைவு!

[சோதனை விளக்கு.]

புராணம் உண்மை; இதிகாசம் உண்மை; எழுதிவைத்த ஏடெல்லாம் உண்மை என்று சில அசடுகள் சொல்லுகின்றன.

ஒன்றும் விளங்காமல் இருட்டில் கிடந்துகொண்டு, அவையெல்லாம் உண்மையென்று கூறி இடர்ப்படுவார்க்கு "சோதனை விளக்கு" போட்டுக் காட்டினால் நலமாக இருக்கும் அல்லவா?

இதைப் பொறுமையாகப் படியுங்கள்! கோபப்படாதீர்கள்! புராணங்களைக் கிளறினால் குப்பையைத் தவிர வேறில்லை என்பது என் வார்த்தை அல்ல. நான் அதிலேயே காலத்தைக் கடத்தப்போவதுமில்லை, ஆனால் மாதிரிக்குக் கொஞ்சம் காட்டுகிறேன்.

"காஞ்சிப் புராணம்" என்று காஞ்சித் தலபுராணம் ஒன்று இருக்கிறது; இதனைப் பாடியவர் லேசான ஆள் அல்ல; மகா மகா மகிமை பெற்ற சிவஞான யோகிகள் ஆவார். அப் பெரியார் திருவாய் மலர்ந்த காஞ்சிப் புராணத்தில் "கடவுளை"யும், கலவியையும் படுத்தியிருக்கும் பாடும், ஆபாசமும் எப்படியிருக்கிறதென்பதற்கு ஒரே ஒரு "சாம்பில்" தருகிறேன்.

காஞ்சிப் புராணம் சுரகரீசப் படலம் பாட்டு 27.

"......கந்தனை நல்கவேண்டிச்,
சீரிமயத்து மடப்பிடியைத்
திருமணஞ் செய்தபின்
எய்தி அங்கண்,
ஏரியல் அந்தப்புரத்தின் மன்னி
ன்பக்கலவி நடத்தலுற்றான்."

பொருள்:- "பரமசிவன், கந்தசாமியைப் பெறுவதற்காகப் பார்வதியைக் கல்யாணம் செய்துகொண்டு அந்தப்புரத்திலே இன்பக் கலவி நடத்த ஆரம்பித்தார்." என்று இப்பாட்டில் கூறப்பட்டிருக்கிறது.

அடுத்த பாட்டில்,

"வண்டிமிர் கூந்தல் இமயவல்லி
வனமுலை தாக்க
மகிழ்ந்து புல்லிக்,
கண்டு கேட்டு உண்டு உயிர்த்து
உற்றுப்பன்னாள் கலவிப்
பெருநலம் துய்க்கும் காலை,
அண்டர் உணர்ந்து வெருவி
அஞ்சி அம்பிகை தம்பால்
கருப்பவீறு,
கொண்டிடு முன்னம் சிதைவு
செய்யும் கொள்கையின்
அங்கியை ஏவினார்கள்.

பொருள்:- வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய பார்வதியின் அழகிய தனங்கள் அழுந்துவதனால் மகிழ்ச்சியையடைந்து கட்டித் தழுவி, அவளைக் கண்டும், இசை கேட்டும், அதரபானம் உண்டும், உயிர்த்தும், கட்டிப் பிடித்தும், பலநாள் தொடர்ந்து கலவியாகிய இன்பத்தைப் பரமசிவன் நடத்தினார். அதனைத் தேவர்களும் அறிந்து, நடுங்கிப் பயந்து அம்பிகை வயிற்றில் கருப்பம் முற்றுவதற்கு முன்னால், அதைச் சிதைத்துவிடவேண்டும் என்று கருதி, அக்கினி பகவானை ஏவிவிட்டார்கள் என்பது.

ஆகவே அறிஞர்கள் இந்த இரண்டு பாட்டையும் கவனிக்கவேண்டும். சுப்பிரமணியனைப் பரமசிவன் பெறவேண்டுமானால் நினைத்தால் முடியாதா? ஒரு பெண்ணைக் கலியாணங்கட்டிப் பலநாள் தொடர்ந்து கலவி செய்துதானா பிள்ளை பெறவேண்டும்? அப்படிப்பட்ட கலவியையும் ஒருமணிநேரம்செய்தால் போதாதா? பலநாள் விடாமல் செய்யவேண்டுமா? அப்படிச் செய்து கந்தக் கடவுளை உண்டாக்கவேண்டுமென்று பரமசிவன் முன்வந்து மும்முரமாக நிற்கும் போது, அதனால் உண்டாகும் கருப்பத்தை அழிக்க மற்ற தேவரெல்லாம் கூடி முயற்சிக்கலாமா? கர்ப்பத்தை அழிப்பது ஒழுங்கா? அதிலும் பார்வதியின் கர்ப்பத்தை அழிக்கத் தேவர்கள் முன்வரலாமா? இது தேவர்கள் செய்யக்கூடிய காரியமா? இப்போதைய ஆட்சியில் இந்தத் தேவர்கள் இருந்து, இப்படிக் கருப்பத்தைச் சிதைவு செய்தால் பெருந் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்பது நிச்சயம்.

பரமசிவனும் பார்வதியும், கலவி செய்த மாதிரியை ஒரு யோகீஸ்வரர் விளக்கிக் கூறுகிற முறை கவனிக்கத்தக்கது. இனி கதையைக் கவனிப்போம்.

அக்கினி பகவான் போய்ப் பார்த்து சந்தர்ப்பம் நன்றாக இல்லையென்று திரும்பி தேவர்களிடம் வந்து,

ஷை பாட்டு 29.

"நீவிர்களே அவணெய்தி
ஊறுநிகழ்த்திடுமின்
கள் எனக்கரைந்தான்"

பொருள்:- நீங்களே அந்த இடத்திற்குச் சென்று கருவை அழித்துக்கொள்ளுங்கள்! என்றான்.

உடனே அரி, அயன் முதலிய தேவரெல்லாம் புறப்பட்டு, மந்தர மலையில் நின்று கும்பிட்டுக் கதறினார்கள். உடனே அதனை உணர்ந்து,

ஷை பாட்டு 30.

"தெரிவையோடு ஆடும் புணர்ச்சி
நாப்பண் சென்றனன்
வெற்றரையோடும் அங்கண்"

(பொருள்) பரமசிவன் பார்வதியோடு புணர்விலிருந்து இடையில் பிரிந்து அம்மணமாகப் புறப்பட்டு வந்தான்" என்பது. இதோடு யோகீசுவரர் நிற்கிறாரா? இல்லை.

ஷை பாட்டு 35.

"வேண்டுவ கூறுமின் உங்கட்கு
இன்னே மேவர
நல்குதும் என்று அருள,
ஈண்டிய மாயனை
உள்ளிட்டோர்தம்
ஏவலினால் முகம்
ஏத்தி எந்தாய்,
மாண்டமலை மகள்பால்
கர்ப்பம் வாய்ப்பது
வேண்டிலர் மால் முதலோர்,
காண்ட கவந்தனர்மேல்
இயற்றும் கடன்
அறியேங்கள் எனக்கரைந்தான்"

இப்பாட்டில் பரமசிவன் "உங்கட்கு என்ன வரம் வேண்டும்? இப்பொழுதே தருகிறேன்"

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

ரோஜா முத்தையா

# புண்ணியக் கிரியைகள்!

(முன் இதழ் தொடர்ச்சி)

**உருத்திராட்ச மான்மியம்.**

இதற்கும் ஒருகதை உண்டு-முன்னதைப்போலவே! தான்செய்யாமல் விட்டுவிட்ட பாவம் இவ்வுலகில் இனி ஒன்றுமில்லை என்று இறுமாப்பு கொண்டிருந்த பாவத்தின் சிகரமான மாபாதகனொருவன், பிறனுடைய மனைவியோடு கூடியிருக்கையில் கண்டுபிடிக்கப்பட்டு கழுவிலேற்றிக்கொலையுண்டுபிறகு தூக்கியெறியப்பட்டான். நான்கு நாட்களுக்குப்பிறகு, நதிக்கரையில் குளித்துக்கொண்டிருந்த ஒரு அரசகுமாரி, தான் அணிந்திருந்த உருத்திராட்ச மாலையைக்கழற்றி அருகிலிருந்த பூஞ்செடி ஒன்றின் மேல் வைத்தபோது, சனிபகவானின் வாகனமாகிய காகமொன்று அந்த மாலையை தூக்கிக்கொண்டு பறந்து செல்லுங்கால், அம்மாலை அதனுடைய பிடியிலிருந்து தவறி மேலே கூறிய அந்த மாபாதகனுடைய பிரேதத்தின் மீது விழவே, சிவன் அவன்பாவங்களை மன்னித்து முக்தி கொடுத்தாராம்! அடடா! சொல்ல மறந்துபோனேனே! அந்தக்கொடிய பாதகன் யார் தெரியுமா? யாராயிருக்கப் போகிறார்கள்...... ஒரு பார்ப்பனன்தான்! ஆனால்......பாவம் ......அந்தத் தாவடத்தைச்சுமந்து திரிந்த அரசகுமாரிக்கும், காகத்திற்கும் சிவனார் எத்தகைய முக்தியளித்தாரென்று இத்தகைய கட்டுக்கதைகளை எழுதிய புராணிகர் சொல்ல மறந்து போனார் போலும்! இந்தப்புராணப் புரட்டுகளை நம்பிய சைவ அனுசாரிகள் உருத்திராட்சம் அணிந்து கொள்ளுவதை ஒரு அடையாளமாகவும் பெருமையாகவும் கருதுவார்கள்.

தங்கத்தில் வைரம் பதித்த மோதிரமும், வைரத் தோடும் மின்சார ஒளியிலே பட்டு டாலடிக்க — உருத்திராட்ச மாலை ஒவ்வொன்றாக உருண்டோட — பல்லெல்லாம் பளபளக்க இந்த உருத்திராட்சப் பூனைகள் — 'கிருபானந்தவாரிகள்' கோவில்களிலே கதாகாலட்சேபம் என்ற சைவத் திருப்பணியை பணத்தின் பெயரால் செய்யும்பொழுது, அவர்கள் பெண்கள் பக்கம் பார்த்துபார்த்து, பார்வதி தேவியாரின் அங்கவர்ணனையை—பார்வதியின் தொடையழகை, பிரம்மா ரசித்து ஆனந்தமடைந்த சம்பவத்தை—சிவனார் கால்தூக்கி ஆடிய வைபவத்தை—பார்வதியும் சிவனாரும் சரச சல்லாபம் செய்து மகிழ்ந்த பள்ளியறைச் சம்பவத்தை, சிரித்து சிரித்து சொல்மாரியாகப் பொழிந்து தள்ளுவார்கள். இது சைவத்தின் பெயரால் கோவிலில் நடைபெறும் திரு பணியாம்! "கழுத்திலே தாவடம்—மனதிலே அவகடம்" என்பதுபோல இந்த உருத்திராட்சப் பூனைகளின் பித்தலாட்டங்களை—சூதுச் செயல்களை—போலி அளப்புகளை நம்பி மோசம் போகாதீர்கள்!

**புத்திரன்**

தேவதாருண்யத்தில் ஒரு அரசன் மகா துன்மார்க்கங்களைச் செய்து இறந்தபிறகு, அவனை யமகணங்கள நரகத்திற்குக் கொண்டு போய் துன்புறுத்துங்காலை, நிலவுலகிலிருந்த அவ்வரசனது ஆறு வயது மகன் மணலைக் குவித்து சிவலிங்கம் செய்து அதனைப் பூசைபண்ணி விளையாடியதைக் கண்ணுற்ற சிவனார் மனமகிழ்ந்து, யமலோகத்திற்கு தனது கணங்களை அனுப்பி அவ்வரசனை அழைத்துவந்து அவனுக்கு சொர்க்கத்திலே ஒரு 'சீட்'கொடுத்தாராம்!

இறந்து போனவனுடைய பிற்கால சந்ததிகள்—முக்கியமாக அவனுடைய வாரிசுகள் செய்யும் பூசாபலன்கள் அனைத்தும் இறந்து போனவனுக்கு நன்மையைக் கொடுக்கும் என்பதை நாட்டு மக்களுக்கு உணர்த்தவே, கடவுளின் பிரதிநிதிகள் தாங்களே என்பதைக் கூறிக்கொள்ளவே இவ்வாறுஎழுதி வைத்தனர் சுரண்டிவாழத் திட்டமிட்ட பார்ப்பனப் புரோகிதர்கள். இந்தப் புரோகிதக் கும்பல் எழுதி வைத்த கைச்சரக்குதான் இது!

தோழர்களே! இந்தப் பார்ப்பனப் புரோகிதர்கள் சொல்லுகிற படியே எடுத்துக் கொண்டால், இறந்து போனவனுடைய பிள்ளைகளுக்கு ஏதாவதொரு சம்பவம் நேரிட்டால் அது அவர்களுடைய இறந்து போன தந்தைக்குச் சம்பவிக்குமோ? இதற்குத் தகுந்த பதில் கூற புராண விசுவாசிகள் முன்வரட்டுமே பார்க்கலாம்!

**பிராமண பீஜம்.**

இதைப்பற்றிப் 'பார்ப்பனீயம் ஒழியட்டும்!' என்ற தலைப்பில் இந்த 'குடி அரசு' பத்திரிகையிலேயே 2-10-48ல் ஒரு கட்டுரை எழுதியுள்ளேன். எனவே இதுபற்றி அதிகம் கூறத் தேவையிராது என எண்ணியே அதிகம் எழுதாது ஒரு சிறிது மட்டும் எழுதுகிறேன்.

வாயைத் திறந்து கொண்டு நித்திரை செய்த ஒரு பார்ப்பனனுடைய வாயில், ஒரு காகங்கொண்டு போன எச்சிற்சாதத்தில் ஒரு பருக்கை தவறி விழுந்ததினால், அந்தக் காகத்திற்கு முக்தி கிடைத்ததாம்!

**புராண விசுவாசம்.**

புராணங்களை எழுதி வைத்
புராணிகர்கள், தங்களுடைய புரா
ணங்களை மற்றவர்கள் மதிக்க
வேண்டும் என்பதற்காக, அந்தப்
புராணங்களின் பிரதி எழுதுகி
வர்களுக்கும், அவைகளுக்குவேண்
டிய கருவிகளான ஓலை, எழுத்
தாணி, கயிறு முதலியவற்றை
கொடுப்பவர்களுக்கும், இந்தப்
புராணங்களை வீட்டிலே வை
திருப்பவர்களுக்கும், அதனை
வாசிப்பவர்களுக்கும், வாசிக்
நின்றுகேட்பவர்களுக்கும்மோட்
லோகத்திலே 'அமர பதவி' கிடை
குமென்று எழுதி வைத்தார்கள்
ஆயினும் சிவபுராணங்களைப் படி
கக்கேட்ட மனிதனுக்குச் சொர்
கம் கிடைத்ததாக இதுவரை கன்
இருப்பதாகத் தெரியவில்லை
ஆனால், மனிதர் அப்புராண
களைப்படிக்கும் பொழுதுஅதை
கேட்டுக்கொண்டிருந்த பறவை
கிய நாரைக்கு, விரிசடையார் என
படும் சிவனார் தரிசனமாகி, நான்
கைகளையும், மூன்று கண்களை
யும் அளித்து, புஷ்ப விமானத்
லேற்றிக் கைலாசத்திற்கு அழை

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்

த்தையா அறக்கட்டளை

# சரபோஜியின் கரங்கள்!

★

"ஜெய், மகாராஜ் சரபோஜி வாழ்க, தீர்க்காயுசுடன்" என்ற ஒலிகளுடன் நுழைந்தார், ராஜகுரு, வித்யா பண்டித வேத பூஷண ஆரிய பட்டர். அரசன் சரபோஜி எழுந்து அவரை அன்புடன் வரவேற்றுத் தனது உயர்ந்த ஆசனத்தை அளித்துத்தான் நின்றுகொண்டிருந்தான்.

மகாராஜ், உட்காரும். உமது பெருமையே பெருமை! காசியிலிருந்து ராமேசுவரம் வரை நான் தீர்த்த யாத்திரை செய்துவிட்டு வந்துவிட்டேன். ஆனால் நமது நாட்டைப்போல் வளம் படைத்தது வேறு எங்கேயும் கிடையாது. இந்நாரும், இந்தப் பிரசாதத்தைப் பெற்று ஆண்டவன் அருளுக்கும் பாத்திரமாகும்"

"சரபோஜியின் கரங்கள் அவற்றைப் பணிவோடு பெற்றுத் தான் ஆரியருக்கும் அவர்கள் மதத்துக்கும் நிரந்தர அடிமை என்னும் முத்திரையை அவனது நெற்றிகளில் தீட்டின"

"எல்லாம், தங்கள் ஆசீர்வாதம் குருதேவ். நாட்டுவளம் என் செயலால் ஆனதா. எல்லாம் வல்ல பிரகதீசுவரர் அருளல்லவா காரணம்?"

"அதுவும் உண்மைதான் சரபோஜி. ஆயினும் அவனது கருணையைப் பெற அருகதையுடையவராகவும் இருக்கவேண்டுமல்லவா. எல்லோருக்கும் கிடைக்குமா அந்தப்பாக்கியம். மாதம் மும்மாரி! சாதம் நிறைய உண்டு. பசி, பஞ்சம், கேட்டறியாத பொருள். மக்களுக்கு ஒரு குறையுமில்லை. ஆனால் என் மனதில் ஒரு குறை தோன்றியுள்ளது வேந்தே. அதுவும், பகவத் கைங்கரிய விஷயமாகத்தான்"

"ஆ, தங்களது 'மனோபீஷ்டத்தை' நிறைவேற்றாவிடில் நான் எக்கதிக்குச் செல்வது பண்டித்! பகவான் விஷயத்தில் என்ன குறை? உடனே சொல்லுங்கள். கஜத்துக்கொரு கோபுரமானாலும் சரி கட்டத் தயார்!"

"அதல்ல மன்ன, யான் வேண்டுவது. அக்குறையைச் சோழர்கள் நிறைவேற்றிவிட்டார்கள். நான் உமக்கு ஒரு விஷயம் சொல்லுகிறேன், கேளும். உம் நாடு செழித்திருப்பதற்குக் காரணமே வேறு எங்கும் இல்லாத அளவு எண்ணிக்கையுள்ள கோயில்கள் தஞ்சையில் இருப்பதுதான். அதிலும் முக்கியமாக கோவில்களைச் சுற்றி வதியும் பிராமண சிரேஷ்டர்கள் சந்துஷ்டியாய் இருப்பதற்கு வசதியளிக்கப்பட்டிருப்பதுதான். எனது மனக்குறை நமது மிகவுயர்ந்த இந்துமதத்தின் மேன்மைகளைப் பற்றி விளக்கப்பட்டிருக்கும் ரிஷி முனிவர்கள் அருளிச் செய்த பல புனித ஏடுகள் ஆங்காங்கே பல மடங்களிலும், தனிப்பட்டோர்களிடத்தும் முடங்கிக் கிடக்கின்றனவே, அவைகளைப்பற்றியது. அவைகளைக் காப்பாற்றி நம் மதத்தைக் கௌரவப்படுத்துவது உம் போன்ற அரசர்கள் கடமையல்லவா?"

"அதற்கென்ன குருவே, அவ்வாறே செய்துவிட்டால்போகிறது. எனக்கும் ஒரு ஆசை. ஒரு புத்தகாலயம் ஏற்படுத்தி பல மொழி ஏடுகளைத் தொகுத்துவைக்க வேண்டுமென்பதே அது. அதற்கான ஏற்பாடுகளைத் தாங்களே கவனித்தால் நல்லவிதமாக அமையுமென நினைக்கிறேன். வேண்டிய பொருள்களை கஜனாவிலிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்" என்று கனிவோடு உரைத்தான் சரபோஜி.

தன் காரியம் வெற்றிகரமாக முடிந்ததுபற்றி ஆனந்தம் துள்ளச் சென்றான் ஆரியபட்டன்.

* *

"என்ன ஓய், சுப்ரமணி, என்ன புத்தக சேகரிப்பு சபையிலே நீரும் ஓர் அங்கத்தினரா மில்ல. ஏங்காணும் இந்த வெட்டிவேலை, ஏராமா பணத்தை செலவழிச்சுண்டு. ஏதாவது நித்தியம் சமாராதனை நடத்தினாலும் பிராமணா வயிறு திருப்தியா போஜனமாவது பண்ணுவா. இதிலே ஏங்காணும் ராஜகுருவுக்கும் புத்தி போச்சு?"

"கணபதி சாஸ்திரியளே, ஒண்ணும் தெரிஞ்சுக்காமே மட மடன்னு பேசாதேயும். ஆரிய பட்டர் செய்யறதெல்லாம் நம்மளவா என்னைக்கும் சௌக்கியமா இருக்குணும்னுதான். ஒரு நாள் ரெண்டு நாள் சமாராதனை பண்ணிட்டால் காரியம் தீர்ந்துச்சா. பிராமணா என்னைக்கும் சுகமாவாழணும்னா இந்த சூத்திரப் பசங்களை நம்ம காலடியிலேயே போட்டு வச்சிருக்கணும். அதுக்குத் துணையா இருக்கிறது நம்ம சாஸ்திரங்கதான். எவனாவது துள்ளினான்னா 'டே, சாஸ்திரத்திலே இந்த மாதிரி சொல்லுது. ஏதாவது துவேஷமா பேசினே தொலைஞ்சு போயிடுவே'ன்னா அப்பறம் வாயைத் திறப்பானுகளா? அப்படிப்பட்ட சாஸ்திர புத்தகங்களையெல்லாம் சேத்துவச்சு நம்ம சந்ததிகளுக்கும் உதவறாப்பலே பண்ணத்தான் ராஜகுரு இந்த ஏற்பாடு பண்ணிருக்கார். நம்மளவா எந்தக் காரியம் ஆரம்பிச்சாலும் அது நம்ம க்ஷேமத்துக்காத்தான் இருக்கும்"

"அதுவும் சரிதான் ஓய். ஆனா ஒண்ணு ரெண்டு சூத்திரன்களும் சபையிலே இருக்கானுங்களாமில்ல.

## இதற்குத்தான் 3000 ரூபாயாம்!

7—8—48ல்
செய்தியும்—சிந்தனையும்
என்பதில் ஒரு பகுதி.

அக்ரகாரம்
என்ற கற்பனைக் கதையில்
ஒரு பகுதி.

28—8—48ல்
ஆச்சாரியார் தவிப்பு—
அம்மையார் மறுப்பு,
என்கிற ஒரு செய்தி கிண்டல்.

இதன் ரகசியம் என்ன?
என்கிற ஒரு செய்தி கிண்டல்.

4—9—48ல்
பச்சிளங்கருவைச் சிதைக்கும்
பாதகமான ஆட்சி!
என்கிற கட்டுரையின் பல
பகுதிகள்.

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

# பாணம் பாய்கிறது!

★

"ஆரியத்தின் ஆணவத்தை—மதநம்பிக்கையின் மடமையை—நாட்டின் நலிவை—திராவிடரின் தாழ்நிலையை — அரசாங்கத்தின் ஊழல்களை, நாட்டு மக்களுக்கு நாடகமாக்கிக் காட்டாதே.

"பார்ப்பனரின் ஆதிக்கத்தை—அறியாமையின் அந்தகாரத்தை—ஜனசமூகத்தின் சீரழிவை—திராவிட மக்களின் அடிமைத் தனத்தை—சர்க்காரின் சர்வாதிகாரப் போக்கை, ஏட்டிலே தீட்டி நாட்டு மக்களுக்கு நல்லறிவு புகட்டாதே.

"கூட்டங்கள் கூடி, கழகங்கள் அமைத்து, ஆட்சியாளரின் யதேச்சாதிகார நிர்வாகத்தை— பார்ப்பனீயத்தின் பயங்கரக் கொடுமைகளை — முதலாளித்துவத்தின் மகோன்னத மமதையை—பாட்டாளி மக்களின் பரிதவிப்பை—தாழ்வுற்ற திராவிடரின் தன்மானமின்மையை எடுத்துக்காட்டி, தாழ்ச்சியுற்ற மக்களுக்கு எழுச்சியூட்டாதே.

"அரசாங்கத்தார்க்கு அறவுரை கூறாதே. மதங்களை மட்டந்தட்டாதே. மூட நம்பிக்கைகளை முறியடிக்காதே. பார்ப்பனரின் பாங்கான சுகபோக இன்ப வாழ்வைக் கண்டிக்காதே. முதலாளித்துவத்தை மிரட்டாதே. பகுத்தறிவைப் பரப்பாதே"— என்று அப்பட்டமாய், அதிகார பூர்வமாய், அறிவிக்கவில்லையே தவிர, செயலளவிலே இவ்வாறும், இதற்கு மேலாகவும், சொல்லாமல் சுட்டிக்காட்டி, நடத்தாமல் நிலைநாட்டி விட்டது, நமது 'காருண்யம் மிகுந்த' காங்கரஸ் சர்க்கார்.

அவர்களுக்குத் தெரியும் - வேல் பாய்ந்த வேழம் வீறிட்டெழும்; தடிகொண்டு தாக்கப்பட்ட காளை சீறிப்பாயும்; அடிக்க அடிக்க இரப்பர் பந்து மேலேதான் எகிறிக் குதிக்கும்—என்ற உண்மை. என்றாலும் விஷப்பரீட்சையில் ஈடுபட்டிருக்கிறது, நம் பரிதாபத்திற்குரிய இன்றைய சென்னை அரசாங்கம். வேண்டாம் இந்த விபரீத புத்தி-என்று நாமல்ல, தேசிய ஏடுகளே கூறிப்பார்த்தாயிற்று. பலனோ பாலையில் பெய்த சிறுமழை தான். 'சிற்றுளிதான் கன்மலையை என்செய்யும்' என்று ஆளவந்தார் வாழாவிருக்கவேண்டாம். சிற்றுளி தான் வன்மலையைச் சிதைக்கும்; சிறு தீப்பொறிதான் பெருங்காட்டை அழிக்கும்; அத்துணை சக்தி பெற்றதுதான் எழுத்தாளனுடைய கைப்பேனாவும். இதனை நாம் கூறவேண்டியதில்லை; வால்டோ ரூஸோ என்பவர்கள் பிரஞ்சு நாட்டிலே நிலைநாட்டிய புரட்சி வரலாறுகளே எடுத்துக்காட்டும், வரலாற்றறிஞர்கட்கு.

இவ்வாறெல்லாம் ஏன் கூறுகிறோமென்றால், வந்ததேதொல்லை எமக்கு என்பதற்காகவல்ல; ஜனநாயக அரசாங்கம் எனத் தன்னைத் தானே கூறிக்கொள்ளும் ஒரு பார்ப்பன அடிவருடி சர்க்கார், நீதியைவிட்டு வழுவி, நேர்மையை விடுத்து, சாய்கிறதே சர்வாதிகாரத்தின் பால் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவேதான்.

சென்ற இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்னர், "விடுதலை"யே நீ ஏன் பார்ப்பனரின் ஆதிக்கத்தை அடுக்கடுக்காக அம்பலப்படுத்தினாய்? நீ செய்த அந்தக் குற்றத்திற்காக எடு ஜாமீன் ரூபாய் பத்தாயிரம். உன் முந்திய ஜாமீன் ரூபாய் 2000 பறிமுதல் செய்துவிட்டது எம்கதராடை சர்க்கார்." என்றும், ஏ 'திராவிடநாடே!' நீ மாத்திரம் என்ன! எடு ஜாமீன் ரூ3000 தன்மானமிழந்த திராவிடர்க்கு எழுச்சி ஊட்டிய குற்றத்திற்காக" என்றும், "குடிஅரசே!" உன்னை மட்டும் விட்டுவிடுவேனோ! மக்களுக்குப் பகுத்தறிவு ஊட்டிய குற்றத்திற்காக, கொடு ஜாமீன் ரூபாய் 3000" என்றும், 'வகுப்புத் துவேஷம் என்னும் "குற்றம்" சாட்டி, சட்டத்தைச் சாக்காகக் காட்டி "விரோதம்" எனப் பழி சூட்டி, நம்மைக் 'கெடுபிடி' செய்தது, கானலைப் புனலென நினைத்துத் தாவியோடும், காந்தீய' சர்க்கார். அது குறித்து நாம் இரங்குகிறோம், நமது திராவிட மந்திரிசபையாச்சே எனும் காரணத்தால். ஆனால் 'பேசாமடந்தை'யாகிவிட்ட நம்ம சுயராஜ்ய சர்க்காரோ, விட்டேனா பார் உன்னை இதோடு. உன் 'போர் வாள்' எங்கே? "திராவிடன்" வருகிறானா! "தனியரசே!" உன்னை......'எனக் கறுவியவாறு நம்மை முறைத்துத்தான் பார்க்கிறது. 'ஆகஸ்ட் தியாகிகள் சர்க்கார் தானே, அப்படித்தான் செய்யும் —என்று நாமும் எடுத்தளித்தோம் பல்லாயிரம் ரூபாய்கள். ஆம் அதிகார பீடத்தை நோக்கி மக்கள் வீசிய பணத் தோட்டாக்களைக் கண்டு. சும்மாவல்ல; நீதி கோரி எதிர் வழக்கு எனும் 'டைனமைட்' வைத்து. "வேண்டாம் இந்த நாசகார வேலை" என்று நாம் கூறும் போது கோபம் வருகிறது, அக்கினிப் பரீட்சையில் ஆழ்ந்திருக்கும் "குமாரசாமி ராஜா" சர்க்காருக்கு. நமக்குத் தெரியும்,-நாம் கூறினால் யாதொரு பயனும் ஏற்பட்டு விடாது, முதலாளியின்முன் பாட்டாளியின் அவதிக் குரல்போல என்பது. இருந்தாலும்எச்சரிக்கை விடுத்தோம் 'கைராட்டை சர்க்காருக்கு'; நீதியின்பேரால் நேர்மையின் பேரால் நடக்கும், அட்டூழியங்களைக் கண்டிக்கவேண்டியது நம் கடன் என்பதாக.

போரிலே உண்டு, நேரிடைத் தாக்குதல், இடுக்கித் தாக்குதல், பின்புறத் தாக்குதல், மின்னல் தாக்குதல், கொரில்லா தாக்குதல் எனப் பலவகை. இவையெல்லாம் போட்டி விளையாட்டுகள் தான், இரணகள வீரர்களுக்கு. குறிப்பாகத் தன்மானத் திராவிடர்களுக்கு நேரிடைத் தாக்குதல்தான் வீர விளையாட்டு. இது நாம் விடும் சரடு அல்ல; சங்க இலக்கியங்கள் சாற்றும் வரலாற்று உண்மை. எனவே நாம் நினைத்தோம், நமது 'மங்களகரமான மஞ்சள்பெட்டி சர்க்கார்' திராவிட மந்திரிகளையே பெரும்பான்மையாகக் கொண்டது, அதற்கும் திராவிடரின் தன்மானம் இருக்கும் என்று. ஆனால் விளைவோ, நாம் எண்ணியது போலல்ல; காந்தியார் கண்ட (?) இராமன் அநியாயமாய், மறைந்திருந்து, வாழைப் பழத்தில் ஊசி நுழைத்தது போல் வாலியைவன்மையாக அம்பு எய்து கொன்றானாமே, அதுபோல வீரதீர பராக்கிரமத்தோடு அடக்குமுறைப் பாணத்தை சட்டத்தின் மறைவிலிருந்து வீசுகிறது, நமது இராம ராஜ்ஜியசர்க்கார். நாம் இவ்வாறு கூறுவது,

# தமிழ்நாடு ராஷ்டிரபதிக்கு!

★

தமிழ்நாடு காங்கரஸ் ராஸ்டிரபதி காமராஜரே! வணக்கம்!

தாங்கள் சில காலமாக, குறிப்பாக இந்த ஓராண்டுகாலமாக எங்களைப்பற்றி (திராவிடக் கழகத்தாரை) பேசாத மேடையில்லை. ஏசாத கூட்டமில்லை. கல்நாட்டு விழா முதல், திறப்புவிழா வரையில் எங்களைப்பற்றி இரண்டு வரியாவது பேசாமல் இருப்பதில்லை. ஏன்! ஒரு ஆஸ்பத்திரியைத் திறப்பதாக இருந்தால்கூட, உங்களைப் போன்றவர்களும் நீங்களும், ஆஸ்பத்திரியில் நர்ஸுகள் நோயாளியிடம் நடந்து கொள்ள வேண்டிய விதம், அந்நிலையம் யார் யாருக்குப் பயன்படவேண்டும், அதில் டாக்டரின் கடமையென்ன? என்பது போன்ற எதைப் பற்றிப் பேசுவதுஎன்பதை மறந்து, எங்களைப்பற்றித்தானே சொற்பொழிவாற்றுகிறீர்கள். உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறோம். மாற்றுக் கட்சியினராகிய-மக்களை ஆளும் கட்சியினராகிய நீங்கள்கூட அல்லும் பகலும் அயராது பேச வேண்டுமென்றால், எங்களைப் பற்றிய செல்வாக்கு எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது என்று எண்ணும்போது எங்களையறியாமலேயே இறும்பூதெய்துகிறோம்.

தங்களைப்போன்றவர்கள், அதுவும் காங்கரசில் பொறுப்புவாய்ந்த தலைவர், ஏன்! சென்னை மந்திரி சபையை ஆக்கவும், அழிக்கவும் சக்தி உள்ளவராகிய தாங்களே இவ்வளவு மட்டரகமாக, மாற்றுக் கட்சியினரைப் பேசுவதென்றால், அதைக்கேட்டு உண்மையிலேயே மனவருத்தப்படுகிறோம். நாட்டை ஆளும் கட்சி ஒன்றிருந்தால், அதை எதிர்க்கும் கட்சி ஒன்று இருக்கும்—இருக்கவேண்டும். எதிர்கட்சி இல்லாவிட்டால், ஆளுங்கட்சியே எதிர்கட்சி ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளும். ஏனெனில் அப்பொழுதுதான் அரசியல் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறும். சில சமயங்களில் எதிர்கட்சியே, ஆளுங் கட்சியாக மாறும்—மாறியேதீரும். இதுதான் மேல் நாட்டில் நடக்கும் அரசியல் அநுபவம்.

ஆனால் திராவிடக் கழகத்தைப் பொறுத்தவரையில் காங்கரசுக்கு எதிர்கட்சி என்றால், எந்த அளவுக்கு நாங்கள் காங்கரசை எதிர்க்கிறோம்? மேல்நாடுகளைப்போல் அரசியலைக் கைப்பற்றும் நோக்கத்துடனா எதிர்க்கிறோம்? காங்கரசில் உள்ள குறைபாடுகளைக் கண்டிக்கிறோம். அதைத் திருத்த வேண்டும் என்று திருத்தம் தருகிறோமே ஒழிய, உங்களை ஒழித்துவிட்டு நாங்கள் பதவிக்கு வரவேண்டும் என்றா எண்ணுகிறோம்!

'நாங்கள் தேர்தலில் நிற்கமாட்டோம்' என்று ஆயிரமாயிரம் மேடைகளில் அறுதியிட்டுக் கூறிவிட்டாரே எங்கள் தலைவர். இவ்வாறு எத்தனையோ மேடைகளில் கூறி இருந்தும், சமீபத்தில்கூட சவால் விட்டிருக்கிறீரே! இது நியாயமா? நேர்மையா? இதோ உமது சவால்:—

"உலக முழுதும் ஒன்றுபட வேண்டும் என்ற தத்துவம்வ்ளர்ந்து வரும்சமயத்தில் நாட்டை மேலும் துண்டாட வேண்டும் என்று திராவிடர் கழகத்தார் இங்கு பிரச்சாரம் செய்து வருகிறார்கள். குழப்ப வேலைகளிலீடுபடுவதை விட்டு, தேர்தலில் நின்று அவர்கள் ஜெயிக்கட்டும்"

என்று 6—6—49ல் குடியாத்தத்தில் பேசி இருக்கிறீர். தேர்தலில் நாங்கள் நிற்கப்போவதில்லை. ஆனால்........., உண்மையிலேயே நாங்கள் தேர்தலில் நின்றால் காங்கரசால் எதிர்த்து நின்று, தமிழகத்தைப் பொறுத்தவரையில் வெற்றிபெற முடியுமா? என்று யோசித்துப்பாரும். விளங்காவிட்டால், 1945க்கு முன் தாங்கள் சென்ற கூட்டங்களுக்கு மக்கள் வந்த கூட்டம் எவ்வளவு, இப்பொழுது (1949) எவ்வளவு பேர் வருகிறார்கள். அப்பொழுது வந்த மக்களுக்கும், இப்பொழுது வரும் மக்களுக்கும் வித்தியாசம் என்ன? அப்பொழுது (வெள்ளையன் ஆட்சியில்) தனியாகவே (பாதுகாப்பு இல்லாமல்) கூட்டம்போட முடிந்ததே, இப்பொழுது மக்களாட்சி ஏற்பட்ட பிறகு, மக்களின் பிரதிநிதிகள் பேசும் கூட்டத்திற்கு, (அதாவது, கவர்னர் ஜெனரல் முதல் ஒரு காங்கரஸ் தொண்டர் பேசும் கூட்டம் வரை) போலீஸ் பாரா இல்லாமல் முடிவதில்லையே என்பன போன்றவற்றை தனியாக உட்கார்ந்து எங்களை மறந்து யோசித்துப் பாருங்கள். அப்பொழுது தெரியும். அடுத்த தேர்தலில் காங்கரஸ் வெற்றிபெறுமா பெறாதா என்பது.

நீங்கள் ஆட்சிக்கு வந்த இந்த

(தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க)

---

அரசாங்கம் நம்மோடு நேரிடைத் தாக்குதல் நடத்திப் பார்க்கட்டுமே என்பதற்காக அல்ல; சிறுகச்சிறுக அங்கங்களைச் சிதைத்து சித்திரவதைசெய்ய வேண்டாம். குற்றத்தை நீதிமன்றம் ஏறி சுட்டிக்காட்டி நேர்மையினிமித்தம் போர் தொடுங்கள்' என்று அறிவுரை கூறுவதற்காகவே.

கடந்தஇரண்டு மூன்று ஆண்டுகளாகவே, பாதிராத்திரியிலே ஆகஸ்ட் "சுதந்திரம்" வந்த நாளிலிருந்து, நமது திராவிடகழகத்தை ஒழித்து விடவேண்டுமென்று நமது நேரு சர்க்கார் மறைமுகத் தாக்குது பிறப்பித் திருப்பதின் பயனாய், நமது கழக தூக்கு மேடை, இரணியன், சர்வாதிகாரி, மகாத்மாவின் தொண்டன்......... முதலிய நாடகங்களுக் கெல்லாம் தடை விதித்தும்; இராவணகாவியம், குயில் பத்திரிகை முதலியவற்றிக்கும் தடை விதித்தும்; நம் கழக கூட்டங்கள், ஊர்வலங்களுக்கு 144 போட்டும்; கருஞ்சட்டைப் படை ஒழிப்பு, கட்டாய இந்தி போதனை, தடியடி, கண்ணீர் புகைபிரயோகம், சிறைவாசம் எனப் பல்வேறு அடக்குமுறைகளையும் நம் திராவிடர் கழகத்தின் மேல் சென்னைஆட்சி மன்றத்தினர் கட்டவிழ்த்து விட்டு வருகின்றனர். இனிமேல் நம் 'உயிர்' ஒன்றுதான் ஆட்சியாளருக்குக் 'காணிக்கை'யாகக்கொடுப்பதற்கு இருக்கிறது. அந்த உயிரின் மீது தான் இப்போது சென்னை மந்திரிசபையின் அடக்கு முறை பாணம் பாய்கிறது. தோழர்களே, வாரீர் திராவிடர் தன்மானம் காக்க என்று அறைகூவி அழைக்கின்றேன்.

—வில்சன்

# குடி அரசு

9—7—49 சனிக்கிழமை.


## பழிவாங்கும் உணர்ச்சி!

★

'குடி அரசு'க்கு ஜாமீனாக ஏன் 3000 ரூபாய் கட்டவேண்டுமென்பதற்குக் காரணங்களை(!) சர்க்கார் நமக்குத் தெரிவித்துவிட்டார்கள்.

7-8-49-ல் செய்தியும்-சிந்தனையும் என்ற தலைப்பில் காந்தியார் காலட்சேபம் பற்றி வந்த செய்தியையொட்டி எழுதிய ஒரு கிண்டல் குறிப்பு ஒரு குற்றமாம்.

அதே தேதியில் அதே தலைப்பில் சாந்தூர் சமஸ்தான நிர்வாகம்பற்றி வந்த செய்தியை ஒட்டிய ஒரு கிண்டல் குறிப்பு மற்றொரு குற்றமாம்.

ஷை தேதியில் கற்பனை என்ற வரிசையில், அக்காகாரம் என்ற தலைப்பில், புதுமைப்பித்தனின் பொன்னகரம் என்ற கதையின் தழுவலாக அடிக் குறிப்புப்போட்டு எழுதப்பட்டிருக்கும் ஒரு கட்டுக்கதை இன்னொரு குற்றமாம்.

28-8-48-ல் ஆச்சாரியார் தவிப்பு அம்மையார் மறுப்பு என்கிற தலைப்பில் எழுதியிருக்கும் ஒரு துணுக்குச் செய்தியும் அதன்கீழ் இதன் ரகசியம் என்ன? என்கிற தலைப்புப் போட்டு எழுதப்பட்டிருக்கும் துணுக்குச் செய்தியும் ஒரு குற்றமாம்.

4—9—48ல் பச்சிளங் கருவைச் சிதைக்கும் பாதகமான ஆட்சி என்கிற தலைப்பில், கர்ப்பிணியை கார் ஏற்றி நடுக்காட்டில் கொண்டுவிட்ட ஓமந்தூராரின் போலீஸ் ஆட்சியை கண்டித்திருப்பது ஒரு குற்றமாம்.

ஆக இந்தக் காரணங்களுக்காக எடுத்துவை 3000 ரூ. என்று கூறிவிட்டது நம் சுயராஜ்ஜிய சர்க்கார்.

இந்தக் காரணங்களைப் பார்க்கும்போது, சென்னை சர்க்காருடைய நடத்தையைப்பற்றி 'நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?' என்று தான் திராவிடத் தோழர்களைக் கேட்கவேண்டியதாய் இருக்கிறது.

காந்தியார் பார்ப்பனர்களைப் போற்றி, அவர்கள் நலத்தில் அக்கரை காட்டியபோது, அவர் மகாத்மாவாக ஆக்கப்பட்டார். பின்பு பார்ப்பனர்களுடைய தனி நலத்தைக் கருதாமல், மக்களுடைய பொதுநலம் என்கிற அடிப்படையில் பார்ப்பனர்களுடைய குறைபாட்டைப் பெரிதாக மதிக்கவில்லை. அவர் எப்போது பார்ப்பனர்களைக் குறித்துச் சற்று அலட்சியமாகப் பேச ஆரம்பித்தாரோ அப்போதே, அவர் துராத்மாவாகக் கருதப்பட்டு, ஒரு பார்ப்பனக் கும்பலால் சதி செய்யப்பட்டு பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த அக்கிரமத்தை மறைப்பதற்காக—நியாயமாக மனித உணர்ச்சியின்படி அல்லது வரலாற்று ஆதாரத்தின்படி, பார்ப்பனீயத்தின் மீது மக்களுக்கு எந்த அளவு வெறுப்பு உண்டாக வேண்டுமோ, அந்த வெறுப்பை மக்கள் மறப்பதற்காகப், பார்ப்பனத் தலைவர்கள் எவ்வளவோ காரியங்களைச் செய்தார்கள். "காந்தியார் இப்படிப் பரிதாபகாமான முடிவையடைந்தது கடவுளின் விருப்பம், கடவுளே அவரை அழைத்துக் கொண்டுவிட்டார்" என்றெல்லாம் நாளுக்குநாள் புதுப்புதுவிதமாய் நாட்டில் 'கயிறு' திரித்தார்கள்.

இந்தத்துக்ககரமான வெறுக்கத்தருந்த வெறிச் செயல் நடந்து, அதனால் மக்கள் வெதும்பிய நிலையில் இருக்கும்போது, காந்தியாரைப்பற்றிக் காலட்சேபம் செய்து, அவர் வாழ்க்கை வரலாறு ஒரு புண்ணிய கதை என்பதாக மக்கள் உள்ளத்தில் தவறான உணர்ச்சியைக் கிளப்பி, பார்ப்பனீயத்தின் மீதுள்ள வெறுப்புணர்ச்சியைப் போக்கிக்கொள்ள, கொல்லை வழி தேடப்படுகிறதே இது நியாயமா? என்பதாகக் கேட்ட கேள்வி ஒரு குற்றமாம்.

சாந்தூர் சமஸ்தானத்தில், மன்னர் தள்ளப்பட்டார், மக்களாட்சி பூத்தது என்கிற செய்தியில், ஆட்சி நிர்வாகத்தில்—அந்த வைபவத்தில் முழுக்க முழுக்கப் பார்ப்பனர்களே கலந்து கொண்டிருக்கிறார்களே, இதற்குப் பெயர்தானா மக்களாட்சி-இதுவா இந்தியயூனியன் ஆட்சி என்பதாகக் கேட்ட கேள்வி ஒரு குற்றமாம்.

உத்தியோகத்தைக் காப்பாற்றிக் கொள்ள, எத்தனையோ ஊதாரிகள் மனைவிகள் தயவையும் ஒத்துழைப்பையும் பெறுவது நம் நாட்டில் புதிய ஒரு சங்கதியல்ல. 'ஸ்டாத்தம் அய்யங்கார்' சரித்திரம் உத்தியோகம் பார்க்கிற ஒவ்வொருவருக்கும், அதுவும் கல்வித் துறையில் வேலைபார்க்கிற ஒவ்வொருவருக்கும் மிக மிக நன்றாகத் தெரிந்த ஒரு சங்கதி. இந்த மாதிரி உத்தியோகத்தைக்காப்பாற்றிக்கொள்ள மானத்தை இழக்கலாமா? என்று கேட்பது போல, கற்பனை என்கிற தலைப்பைப் போட்டுக்கொண்டு இது பொன்னகரம் என்ற இன்னொரு கதையைத் தழுவியது என்று முடித்துக் காட்டியிருக்கும் கற்பனைக் கட்டுக்கதை ஒரு குற்றம் என்கிறது சர்க்கார்.

அப்படியானால் காந்தியார், ஒரு வெறி நாய் சுட்டுக்கொல்லப்படுவது போல் சுட்டுக்கொல்லப்பட்டதை நியாயம் என்று நினைக்கிறதா இந்த சர்க்கார்? இயற்கைக்கு மாறாகக் காந்தியாரைக் கடவுளோடு பிணைத்து, காந்தியார் படுகொலையை மக்கள் மறப்பதற்காகப், பார்ப்பனர்கள் காந்தியாரைப்பற்றி அளந்துவரும் புளுகு மூட்டைகளையெல்லாம், அத்தனையும் உண்மை என்று சாதிக்கிறார்களா நம்ம சுயராஜ்ஜிய சர்க்கார்? ஒரு சமஸ்தான நிர்வாக மாற்றத்தில், நிர்வாகத்தில் கலந்து கொண்ட அத்தனை பேரும், 100க்கு 3 பேராக இருக்கும் பார்ப்பனர்களே கலந்து கொண்டிருக்கிறார்களே, இது என்ன அக்கிரமம்! இதற்குப் பெயர்தானா யூனியன் ஆட்சி என்று கேட்பது குற்றமென்றால், பார்ப்பனர்கள் தான் நாட்டை ஆளுவார்கள், நீ அதைப்பற்றிப் பேசக்கூடாது என்கிறார்களா நம்ம சுயராஜ்ஜிய மந்திரிமார்கள்? உத்தியோகமே பெரிது! மானம் பெரிதல்ல! உத்தியோகத்தைக்காப்பாற்றிக்கொள்ள மனை

விலையும் கூட்டிக்கொடுக்கலாம்! ஆனால் அதைப்பற்றி பேசுவதற்கு —எழுதுவதற்கு நீ யார் என்கிறார நம்ம பவநகர் மகாராஜா வான கவர்னர் பிரபு அவர்கள்? என்று நாம் கேட்கிறோம்.

28-8-48ல், "மார்ச்" என்கிறவடநாட்டுப் பத்திரிகையில் ஆச்சாரியாரைப்பற்றி, கார்ட்டூன் போட்டு, கிண்டலாக எழுதப்பட்டிருந்தது தான், "ஆச்சாரியார் தவிப்பும் அம்மையார் மறுப்பும்" என்று தலைப்புப்போட்டு மொழிபெயர்க்கப்பட்டதாகும். இதைப்பற்றி 'மார்ச்' என்கிற பத்திரிகையின்மீது சர்க்கார் வழக்குத் தொடர, அது தள்ளுபடி செய்யப்பட்டிருந்தும், அந்த முடிவைத் தெரிந்துகொண்டே நம் சென்னை சர்க்கார் இந்த மொழிபெயர்ப்புக்குக் கொண்டா 3000 என்றால் இந்த சர்க்காருக்கு நீதியைப்பற்றி—நீதியின் முடிவைப் பற்றிச் சிறிதாவது கவலை இருக்கிறது என்று சொல்ல முடியுமா என்று கேட்கிறோம்.

பத்திரிகை ஆலோசனை போர்டில் பார்ப்பன ஆசிரியர்களான 'சகுனி மாமாக்கள்' இந்த விஷயத்தைப்பிரமாதப்படுத்திய நேரத்தில், ஒரு வெளிநாட்டுக்காரர்—சென்னை மாகாணப்பத்திரிகாசிரியர்மட்டும் "இதைக்குற்றமென்று சொல்லுவது தப்பு. இதைக்குற்றம் என்றால் 'மார்ச்' பத்திரிகையல்லவா குற்றவாளி? இதற்கு 'குடி அரசு' எப்படிப் பொறுப்பாகும்" என்றெல்லாம் சரமாரியாகக் கேள்வி கேட்டார் என்றுகூட ஒரு வதந்தி உலவுகிறது. இதற்குப் பிறகும் கூட இந்த மொழிபெயர்ப்பைக் குற்றம் என்றால், நீதிமன்றங்களை நம் சென்னை சர்க்கார் எந்த அளவு கேவலப்படுத்துகிறதெனக் கேட்கிறோம்.

அதே ரகத்தைச் சேர்ந்ததுதான் "இதன் ரகசியம் என்ன" என்கிற தலைப்பில் எழுதியிருக்கும் கிண்டல் செய்தியும்.

4-9-48-ல் இந்தி எதிர்ப்புத் தொண்டர்களை-8 மாத கர்ப்பிணியும் கலந்திருக்க — அவர்களைக் காட்டுமிராண்டித்தனமாக நடத்தி —கர்ப்பத்திற்கும் ஊறு விளைவித்த ஓமந்தூராரின் போலீஸ் ஆட்சியைக் கண்டித்தது தவறு என்றால், நீதிபதி கொடியைப்பற்றி பேசியது நேர்மையற்றது என்று எடுத்துக்காட்டியது தவறு என்றால், போலீஸ் நிர்வாகத்தில் என்ன அட்டூழியம் நடந்தாலும் வாயைத் திறக்கக்கூடாது; நீதிபதிகள் எவ்வளவு நேர்மைத் தவறாக நடந்தாலும் அதை எடுத்துக் காட்டக்கூடாது என்பதுதானே நம்முடைய சுயராஜ்ஜிய சர்க்காரின் கட்டளை? இந்தக் கட்டளையை ஒரு சுதந்திர உணர்ச்சியுடைய—அநீதிக்கு அஞ்சுகிற—எந்த மனிதன்தான் எடுத்துக் காட்டாமல் இருக்கமுடியும் என்று கேட்கிறோம்.

சர்க்காரால் சுமத்தப்பட்டிருக்கும் இக் குற்றச்சாட்டுகள், எப்படியாவது—எந்தக் காரணத்தைச் சொல்லியாவது 'குடி அரசு' என்கிற பத்திரிகையிடத்திலும், அதன் பங்குவிகிதாச்சாரத்திற்கு 3000 ரூ. பறித்துவிடவேண்டுமென்கிற ஒரே நோக்கத்தோடு, கூறப்பட்டிருக்கிறதே தவிர, நீதி மன்றத்திலும் இது நீதிக்குப் பிழை என்று சாதித்துவிடமுடியுமா என்று கேட்கிறோம்.

வகுப்புத் துவேஷத்தை உண்டாக்கும் குற்றங்கள், அவதூறை உண்டாக்கும் குற்றங்கள் என்பதாகவெல்லாம், இந்தச்செய்திகளுக்குக் 'காதும் கண்ணும்'வைப்பதாக இருந்தால், இந்த வகுப்புத் துவேஷத்தால் எந்த வகுப்பினருக்கு எப்படி எப்போது நஷ்டமுண்டாயிற்று? பார்ப்பனர்கள் மீது துவேஷத்தைக் கிளப்பியிருக்கிறதென்றால் எத்தனை பார்ப்பனர்கள் கொல்லப்பட்டார்கள்? அவமானம் செய்யப்பட்டார்கள்? என்பதைச் சர்க்கார் புள்ளி விபரத்தோடு கூறவேண்டாமா? என்று கேட்கிறோம்.

குடி அரசுக்கு ஜாமீன்கேட்ட நடத்தையிலிருந்து, அதுவும் ஜாமீனுக்கு ஆதாரமாகக் காட்டியிருக்கும் குற்றச்சாட்டுகளிலிருந்து, சென்னை சர்க்கார் பழி வாங்கும் உணர்ச்சியோடு நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று கூறுவதைத் தவிர, கொடுமைப்படுத்தி சித்திரவதை செய்ய வேண்டுமென்கிற ஒரு "பெருங் குணத்தை" கொண்டிருக்கிறார்கள் என்று கூறுவதைத் தவிர, வேறு என்ன நியாயத்தைச்-சமாதானத்தைக் கூறிவிடமுடியும்?

இந்த அநாகரீகமான படலங்கள் நாட்டில் நடக்கவேண்டியது தானா? அக்கிரமப் போக்குகள் எவ்வளவு காலத்திற்குத்தான் செல்லுபடியாகும்?

தோழர்களே! தீர்ப்பளியுங்கள்.

---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாண்டுகளில் மக்களுக்குச் செய்த நன்மையில் எதைச் சொல்லி ஓட்டுப் பெறமுடியும்? வயிற்றுக்கு உணவு போதவில்லையே என்றால் மாதத்திற்கு இரண்டுநாள் பட்டினி கிடந்தால் சரியாய்போய்விடும் என்கிறீர்களே! இதுதானே (பட்டினி) உங்கள் ஆட்சியில் மக்கள் கண்ட பலன்? இதைக் கூறி ஓட்டுப் பெறமுடியுமா?

ஓட்டுப் பெறவேண்டுமானால் ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது, காங்கரஸ் தலைவர்கள் அத்தனைபேரும், டெல்லி தலைவர் முதல் தென்னாட்டுத் தலைவர் வரை ஒருசேரச்சென்று ஆண்டவன் முன்னிலையில் சென்று, உங்கள் குறைகளைக் கூறுங்கள். அவர் ஒருக்கால் மனமிரங்கி, உங்கள் பக்திக்கு மெச்சி புது வாக்காளர்களை உண்டுபண்ணினால், அவர்களைக் கொண்டு ஒருக்கால் அடுத்த தேர்தலில் வெற்றி பெறலாம்.

ஒருசமயம், பொதுமக்களிடம் கொடுத்த வாக்குறுதியை மறந்து இன்று அவர்களையே அழிக்கக் கூடிய அளவுக்கு வரி விதிப்பதை எண்ணிவிடுவீரேயானால் உங்கள் பாடு திண்டாட்டமாகத்தான் முடியும். ஆண்டவனுக்கு ஈந்த வாக்கை அவமதிக்கமாட்டீர்கள் என்பதற்கு எப்படி உங்களை நம்பமுடியும்—நம்புவார்.

அன்று நீங்கள் கூறியதை உண்மையென்றுதானே நம்பினார்கள். அன்று அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைப் பறக்கவிட்டுவிட்டீரே! கப்பல் ஏற்றிக் கண்காணாச் சீமைக்கு அனுப்பிவிட்டீரே!

கிண்டலுக்கோ சொல் அலங்காரத்துக்கோ எழுதியதல்ல. மனம் புண்பட்டு எழுதியவை. என்ன நன்மையைக் கண்டுவிட்டோம் இந்த இரண்டாண்டு ஆட்சியில். எங்கள் குறையை எடுத்துச் சொல்ல உரிமை இல்லாமல் போய் விட்டதே! ஜனநாயகத்துக்குச் சமாதி கட்டிவிட்டீரே!

அய்யா! ஆத்திரப்படாமல் சிந்தித்துப் பாரும்! ஏன் இவ்வளவு

தூரம் எழுதுகிறேன் என்றால், எங்களைப் பட்டினி போட்டுக் கொல்வதுமட்டுமல்ல, அறிவுக்கு அணை கட்டுகிறீர்—பகுத்தறிவுக்குப் பாதகம் விளைவிக்கிறீர். வருங்கால சந்ததி உங்களை நிந்திக்கும். "குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பே'' என்று வருங்கால வரலாற்றில் வரைவார்கள். அந்த அளவுக்கு இழிவைத் தேடிக் கொள்ளாதீர்கள். என் இனத்தார் என்ற காரணத்தினால் இதை எழுதினேன்.

அய்யா ராஸ்டிரபதியே! வீணாக எங்களை நிந்திக்க வேண்டாம். நாடு இருக்கும் இந்நிலையில் காலத்தை வீணாக்காதீர்கள். பொன்னான காலமிது—விஞ்ஞான காலமிது—பகுத்தறிவு காலமிது. இக்காலத்தில் பழைய பல்லவிபாடினால் பலனோ, பயனோ ஏற்படாது. எங்களையும் வீணாகப் புண்படுத்தாதீர்கள். எங்கள் தலைவருடன் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வாருங்கள். எங்கள் தலைவருடன் சமமாக இருந்து பேசுவதற்கு உங்களுக்கு விருப்பமில்லையானால் தொலைகிறது. விட்டுவிடுங்கள்.

உங்கள் கையில் அதிகாரம் இருக்கிறது எங்களை ஆட்டிப் படைக்க. விளைவை எதிர்பார்க்காமல் எதையும் உங்களால்செய்ய முடியும்—செய்தும் இருக்கிறீர்கள். ஆகையால் எங்கள் தலைவர்களுக்குச் சம்மன் அனுப்புங்கள். 'நீங்கள் நாட்டில் நாஸ்தீகப் பிரச்சாரம் செய்து, நாட்டையும், நாட்டு மக்களையும் நாசமாக்கி-மக்களைக் கெடுத்து வருவதாக அரசாங்கம் எண்ணுவதால் நீதி மன்றத்தில் வந்து உங்கள் கொள்கையை விளக்க வேண்டும். நாட்டுக்கு நன்மை பயப்பதாக இருந்தால் அதை அரசாங்கம் முழு மனதுடன் ஏற்று நடைமுறைக்குக் கோண்டுவரத் தயாராக இருக்கிறது'' என்று கட்டளை பிறப்பியுங்கள். கூண்டில் ஏறிக் கூறுகிறோம் எங்கள் கொள்கையை. எப்படியாவது ஒரு சமரசத்துக்கு வர வேண்டுமென்பதுதான் என் ஆசை. இதே நிலை நீடித்தால், நாட்டில் பசி, பட்டினிப்பட்டாளங்கள் பெருகி விடும். நாடு மிகவும் நலிந்துவிடும். ஆகவே தக்கது செய்யத் தைரியம் இருக்குமா?

வணக்கம்.

பரசுராம்.

[5ம் பக்கத் தொடர்ச்சி]

அந்தக் கழுசடைகளை ஏன் சேர்த்துண்டேள்?''

"ஆமாஓய், பின்னாலேநம்மளை துவேஷமாபேசாம இருக்கிறதுக்கு முன்ஜாக்கிரதையா அவன்கள் ஏடுகள்ளேயும், அங்கேஒண்ணு இங்கே ஒண்ணுவச்சிடலான்னுயோசனை. ஆனா, அந்த வேலாயுத முதலியை சபையிலே சேர்த்தும்போது சும்மா தமிழ் தமிழ்னு கதர்றான். அவங்க சிலப்பதிகாரத்தைக் காணுமாம். எவ்வளவோ தனிப் பாடலாம், அதையெல்லலாம் தேடணுமாம். நாங்கதான் அவனை மட்டந்தட்டி வச்சிக்கிட்டு வர்ரோம். எப்படிப்பார்த்தாலும் நம்ம சமஸ்கிருத ஏட்டளவிலே அரைவீசம் பங்குகூட அவன்கள் ஏட்டுக் கணக்கு விழக்கூடாது என்றுதான் நாங்க அவங்க புத்தகத்தை வெலக்கிக்கிட்டு வர்ரோம். கீரையிலே பச்சைமிளகாய் மாதிரி, அதனாலே நம்ப சாத்திர மகிமை கொறயாது.''

"அதுசரி சபையிலே மொத்தம் எத்தனைபேர் இருக்கிறீங்க?''

"நம்மளவா இருபது. தமிழ், மராட்டி முதலிய பாஷை ஒவ்வொண்ணுக்கும் ஒவ்வொருத்தன். ஆக மொத்தம் இருபத்தைஞ்சு பேர். சரி கணபதி சாஸ்திரியளே உமக்கு ஏதாவது ரொக்கம் வேணுமா? கஜானா நம்பளது. நப்ப கிட்ட வந்திருக்கிற சில ஏடுகள் நீர்தான் கொடுத்துதவினீர்னு சிபார்சு பண்ணி ஒமக்கு உபகாரத்தொகை அளிக்கச்சொல்றேன்.''

"சுப்ரமணி, நீர் தங்கமானவரய்யா, கொஞ்சம் நம்மளையும் அப்படிக் கவனிச்சுக்கும். நம்ம அத்திம்பேர் ஊர்சுத்திக்கிட்டிருக்கான். அவனுக்கும் ஒரு வேலை உங்க ஆராய்ச்சி சம்மந்தமா போட்டுக்குடும்.''

"அதுக்கென்ன என்னை வந்து பார்க்கச்சொல்லும் அவனை; நான் வர்ரேன்'' என்று கிளம்பினார் சுப்பிரமணிய அய்யர்.

*　　　*

சிவாஜி வம்சத்திலே தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னன் சரபோஜி, பார்ப்பனர்களின் மகுடிக்குப் படமெடுத்தாடும் நாகமாயிருந்தான், ஆரியர் கொழுத்தால் நாடு செழிக்கும் என்ற எண்ணம் அவன் மனதில் வேரூன்றும்படி செய்யப்பட்டிருந்தது. யாகத்தினால் மழை, யோகத்தால் முக்தி, சமாராதனையால் நாட்டில் சமாதானமும் செழிப்பும் என்றெல்லாம் அவனுக்குஉபதேசம் செய்யப்பட்டிருந்தபடியால் பார்ப்பனர்கள் அந்த வேலைகளைச் சரிவரச் செய்துவர மக்கள் வரிப் பணத்தைச் சரபோஜியின் கரங்கள் அள்ளி வீசின தாராளமாக. அக்கிராகாரம் ராஜபோகம் அனுபவித்து வந்தது.

செல்லரித்துப் போய்க் கொண்டிருக்கும் ஆரிய ஏடுகளை அரியாசனத்தில் நிலைப்படுத்த வேண்டும் என்ற அவர்களது நெடுநாள் மனக்குறையும் இப்பொழுது நிறைவேறி வருவதுகண்டு அவர்கள் அடைந்த களியாட்டத்தை எடுத்துரைக்க இயலுமோ? புராதன ஏட்டுத் தொகுப்பு சபையின் பூசுர அங்கத்தினர்கள் அரசாங்கச் செலவில் காசிமுதல் ராமேசுரம் வரை உல்லாசபவனி வந்ததுமட்டுமல்ல, இந்து தர்ம ஸ்தாபனங்களுக்கும் மடங்களுக்கும் புரோகிதர்களுக்கும் பணத்தை வாரியிறைத்தனர். தாங்களும் உண்டு கொளுத்தனர்.

வடநாட்டிலிருந்து சமஸ்கிருதச் சுவடிகளைக் கொணர்ந்தனர். காலத்திற்கேற்றவிதமாக, வெளிப்பட்ட சில புளுகுகளை, மெருகிட்ட புளுகாக மாற்றி சில ஏடுகளைத் திருத்தி எழுதி அனலில் காட்டி புராதன ஏடுமாதிரியாக்கினர். அப்படி இப்படி என்று 30,000 வடமொழிச் சுவடிகளைத் தயார்செய்து தமிழ் முதலிய அண்டை மொழிகளில், திராவிட அங்கத்தினர்களின் முயற்சியால் தேறிய ஓராயிரம் ஏடுகளோடு சமஸ்கிருதப் பெயரில் 'சரஸ்வதி மகால்' என்று ஒரு மண்டபத்தை அமைத்து அதில் வைத்தனர் ஆரியக் காவலர்.

இப்பொழுது பூதேவப் பரம்பரைக்கு முழு திருப்தி. ஆனந்தத் தாண்டவம் ஆடியது. ஆனால் அதன் ஊடே ஊடே சிறு சிறு அச்சமும் தோன்றலாயிற்று. ஏகபோக ஆதிக்கம் செலுத்திய அக்கினி யாஸ்திர வீரர்களுக்கும் கூட நடுக்க மளித்தது, தமிழ் நாட்டிலும் அதை அடுத்தும் அன்றிருந்த

அரசியல் சூழ் நிலைதான்.

ஆங்கிலேயர்கள் வெற்றிமேல் வெற்றி பெற்று வந்தனர். திப்பு கொல்லப்பட்டு ஸ்ரீரங்கப் பட்டணம் வெள்ளையரால் பிடிக்கப்பட்டது. தென்கன்னடம் கோயமுத்தூர், வயநாடு முதலிய இடங்கள் அவர்கள் ஆட்சிக்குட்பட்டன. தஞ்சையின் மீது ஆங்கிலேயரின் கண்பார்வை எப்போது விழும் என்பதே தீர்மானிக்க முடியாததாயிருந்தது. அதற்காக அரசனல்லவா அஞ்சவேண்டும்? அக்கிரகார வாசிகள் அலறுவதென்றால்...! காரணமில்லாமலா இருக்கும்.

செய்திகள் வந்தன, "இன்று தூத்துக்குடியில் முன்னூறு பேர்கள் கிருத்துவர்களாகி விட்டனர். கள்ளிக்கோட்டையில் பாதிரிமாரின் உபதேசத்தால் இந்து மதத்தினர் 500 பேர் ஏசுவைத் தங்கள் ஆண்டவனாக ஒப்புக்கொண்டனர்" என்று நாள்தோறும் ஆரியர் காதில் விழுந்தன. ஆ, அப்படியா, இந்து மதம் தேய்கிறதே! என்ன செய்வது, அதேகிருத்துவமதத்தைச்சேர்ந்தவர்களான வெள்ளையர் தஞ்சையைக் கைப்பற்றினால் தங்கள் மதத்துக்கு சரபோஜி கொடுக்கும் ஆதரவு அற்றுப்போகுமே, அப்பொழுது தங்கள் வாழ்வு சுருங்குமே என்று ஆதிக்கக்காரர் அஞ்சினர்.

அதைவிடப் பெருங்கவலை ஒன்று, புல்லேந்திகள் மனத்தைப் புண்ணாக்கியது. அதுதான் சரஸ்வதி மகாலைப்பற்றியது. 60000 பவுன்கள் செலவில் அமைக்கப்பட்ட அந்த 30000 சாஸ்திரச் சுவடிகளை வெள்ளையர் என் செய்வாரோ? நெருப்பு வையுங்கள் என்றாலும் ஆச்சரியமில்லையே, அவர்கள் ஆராய்ந்து முடிவுகட்டிய உண்மைகளைத்தான் ஒப்புக்கொள்ளும் இயல்பினராமே. இந்தப் புராணப் பொய் மூட்டைகளைத் 'தகனம்' செய் என்றால்தடுப்பார்யார்அவர்களை? என்றெல்லாம் எண்ணியபோது அவர்கள் கண்கள் தாமாகக் கண்ணீரைச் சொரிந்தன.

சும்மா இருப்பரா, சுயநலவாதிகள்! வெள்ளம் வருமுன் அணை போடவெனத் திட்டமொன்றைத் தீட்டினர். ஆங்கிலப் படைமுன் தஞ்சை நில்லாதென உறுதியாக நம்பினர் அவர்கள். முடியிழந்தால் சரபோஜி எங்கிருந்து சரசுவதி மஹாலைக் காப்பாற்றப்போகிறான்? ஆகவே இனி அவர்களுக்குச் சரபோஜியின் தயவு தேவையில்லை. ஏதோ அவன் புண்ணியத்தால் சேகரித்தாய்விட்டது சுவடிகளை. இனிமேல் அவைகளைக் காப்பாற்ற எதிர்கால அரசின் உதவியல்லவா வேண்டும். அதைப் பெறுவதெப்படி? அவர்களுக்கா தெரியாது, சஞ்சலமடைந்த அவர்கள் வஞ்சக நெஞ்சிலே உருவானதுதான் தஞ்சையில் மராட்டிய ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த சதிகாரத் திட்டம்!

* *

சரபோஜி ஆழ்ந்த சிந்தனையுடன் இங்குமங்கும் உலவிக் கொண்டிருந்தான். 'குருதேவ்' ஆரியபட்டன் மெத்தையிட்ட ஆசனமொன்றில் அமர்ந்திருந்தான்.

"குருதேவ், இனியும்நாம் சும்மா இருக்க இயலாது. வீர சிவாஜியின் வழி வந்த சரபோஜி, அன்னியர்களின் அடி பணிந்தான் என்ற அவச்சொல் ஏற்படலாகாது. சபவேளை பார்த்துச் சொல்லுங்கள். படை திரட்ட உத்திரவு விடுகிறேன். நமக்கு வந்த தகவலின்படி வரும் வெள்ளியன்று ஆங்கிலப் படை தஞ்சைப் படையெடுப்புக்கெனப் புறப்படுமெனத் தெரிகிறது"

"சரபோஜி, ஆம், உண்மைதான். புலியின் வாரிசு எலியாகமுடியுமா? சிவாஜியின் வீரத்தின் எதிரொலியல்லவா நீர். ஆனால் வேளை சரியல்லவே. மேலும் உமக்கு நான் ஓர் ஆச்சரியத்தை அளிக்கும் செய்தியைச் சொல்லப்போகிறேன். நீர் போர் புரியாமலே பகைவரை வெருட்டி ஓட்ட முடியும்!"

"அதெப்படி முடியும், வேத வித்தகரே! வாள் அல்லது வஞ்சகம் இரண்டே வழிகள் தான் உள்ளன, பகைவரை மிரண்டோடச் செய்ய. பின்னது கோழைகளது தனி உரிமை. மராட்டிய மன்னனுக்கு அழகல்லவே. ஆதலின் இதோ இந்த வாளேந்தி எதிரிகள் எனது தாளேந்தும்படி செய்வதென முடிவு கட்டி விட்டேன்"

"அவசரப்படாதீர் வேந்தே! நீர் சொன்ன இரண்டுமல்ல நான் வெளியிடப்போகும் முறை. இது புதியது. இதுவரை யாரும் உபயோகியாதது!"

"ஆ, உண்மையாகவா, உத்தமரே? அது எந்த யுத்த சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது? அதைப்பற்றி என்னிடம் இது நாள்வரை பிரஸ்தாபித்ததே இல்லையே!" ஆச்சரியத்துடன் ஆவலாகக் கேட்டான் அரசன்.

"எனக்கும் இதுநாள் வரை தெரியாது மன்ன. நம் சரஸ்வதி மகாலில் சேகரிக்கப்பட்ட சமஸ்கிருதச்சுவடிகளை ஒவ்வொன்றாகப் பார்த்துவருகிறேன், நான். அதிலே 'துளசி மகாத்மீயம்' என்ற நூலில் இந்த முறை விவரிக்கப்பட்டிருக்கிறது. நாம் சரஸ்வதி மகால் கட்டினதின் கைகண்ட பலன்களில் இது ஒன்று. சரபோஜி! அந்த ரகசிய முறையைச் சொல்லுகிறேன் கேளும். கோட்டை வாயில் முன் துளசித் தழையை அர்ச்சித்துத் தூவி விட்டால் எதிரிகள் உள்ளே நுழைய முடியாது. துளசியைத் தாண்டினால் போதும், அவர்களது சித்தம் கலங்கி, பித்தம் தலைக்கேறி, தங்கள் லட்சியத்தை மறந்து திரும்பி விடுவர்"

"என்ன, பண்டித்! அப்படியானால் படை வேண்டுவதில்லை, துளசியே தடைப்படுத்திவிடும் அயலாரை என்கிறீர்களா? நம்ப முடியவில்லையே! இருப்பினும் தாங்கள் அறியாதது ஒன்றுமில்லை. இந்த அற்ப அறிவு படைத்தோனுக்குச் சற்று விளக்கிடுங்கள் வேத வல்லவரே!"

"சரபோஜி, சந்தேகம் வேண்டாம். துளசியின் மகத்துவத்தை நீர் அறிய மாட்டீர். அன்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் எடைக்குச் சரியாக நின்றதெது? தங்கக்கட்டிகளா, இல்லையே! ஒரே ஒரு துளசி இலை. அதைக் குறித்து அய்யமுறுவதே மகாபாவம். கலங்காதீர். இன்றே துளசியை அர்ச்சித்து கோட்டை வாசலில் தெளிக்க உத்திரவிட்டுவிடும். நான் வருகிறேன்"

ஆரிய பட்டன் சூழ்ச்சியின் இரண்டாம் கட்டம் நிறைவேறியது. முதல் கட்டம்தான் முன்னரே முடிந்துவிட்டதே! அதுதான் திருச்சியில் முகாம் போட்டிருந்த ஆங்கிலப் படைத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தது!

(தொடரும்)

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

துப் போனார் என்று மட்டும் கதையிருக்கிறது. மிருகங்கள், புல், பூண்டு, மாங்களுக்குங்கூட அப்புண்ணியம் கிடைக்குமாம்!

"சதிர் பெறும் ராமன்கதை
சதகோடி பிரபந்தமாகு
மதிலோ ரட்சரம் சொன்னாலும்
அருவினை போகுமென்று"

இராமாயணத்திலே எழுதப்பட்டுள்ளது. இப்படியாக, "ஐய்ந்தறிவு படைத்த மிருகங்களுக்கும், உயிரற்ற இயற்கைகளுக்கும் புண்ணியம் கிடைக்கும், புராணத்தை விசுவாசித்தால்!"—என்று எழுதி வைத்து மக்களை மடையராக்கினர் மமதையாளர்கள்!

நாமார்ச்சனை.

இதே தலைப்பில் தனியாக ஒரு கட்டுரை எழுத எண்ணங்கொண்டிருப்பதால் எழுதாது விடுக்கின்றேன்.

இதுவரை நான் விவரித்துவந்த ஒவ்வொரு கிரியைகளும் பார்ப்பனப் புரோகிதர்கள் வயிறு வளர்க்கவும், ஏமாந்தவர்களின் தலையை மொட்டையடிக்கவும் ஏற்பட்ட சதித் திட்டங்கள்தான் என்பதை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். இருந்தும் பெரும்பாலோர் இதனைப் படித்தபின்பும் இந்தப் புராணங்களிலே அர்த்தமற்ற, தெளிவற்ற நம்பிக்கை வைத்திருப்பார்கள்.

அவர்களுடைய சிந்தைக்கு வேண்டுமானால் மறுபடியும் ஒரு 'இன்ஜக்ஷன்' கொடுக்கிறேன்—பெனிஸிலின் இன்ஜக்ஷன் போல மருந்து நான் தயாரித்ததல்ல! அவர்களுடைய இந்து மத ஞானிகள் தயாரித்ததே! அதிக வல்லமை வாய்ந்தது! இது ஒன்றே போதும் என்று எண்ணியே இதனைக் கடைசிமுறையாக ஏற்றுகிறேன். இதிலும் குணம் தெரியாவிட்டால் அந்த மரக்கட்டைகள் வாழவே அருகதையற்றவர்கள் — உணர்ச்சியற்ற வெறும் மாமிசப் பிண்டங்கள் என்றுதான் நான் 'குறிப்பு' எழுதிவைக்க நேரிடும்.

"தேடுவாய் புலத்தியனே
நன்றாய்க் கேளு
தீக்கிடங்கைத் தேடாதே
தெளியச் சொன்னேன்
பாடுவாய் பதினெட்டுப்
புராணங்கட்டுப்
பாரதமும் கட்டப்பா
பரிகாசங்கள்
நாடதனிற் பிராமணர்
பிழைக்கச் செய்த
நவக்கிரகக் கட்டப்பா
நம்பவேண்டாம்
ஓடுவா ரருள்பாத பூசை செய்து
உத்தமனே கண்ணீரால்
கழுவுவாயே"

"மனிதரை அடிமையாக்கி, பொருளாதாரம், அறிவுத்துறை, வாழ்வு அந்தஸ்து முதலிய சகல வழிகளிலும் சமூகத்தில் பெரும்பாலான மக்களை 'இல்லாதவர்களாக்கி, ஏமாந்தகாலத்திலே குள்ளநரிக் குணம் படைத்தோர் ஏற்றம் பெற வழிவகுப்பனவே இந்தப்புராணங்களனைத்தும்! நம்பாதே! நம்பி தீக்கிடங்கைத்தேடாதே! இவையனைத்தும், நாடதனில் பார்ப்பனர் பிழைக்க வழி செய்த நவக்கிரகக் கட்டப்பா!—நம்பாதே இவற்றை!" என்று இந்துமதஞானிகள் அபாய அறிவிப்புச் செய்கின்றனர். அறிவுக்கதிரின் ஒளி நாலாபக்கமும் சிதறும் வகையில் புதுயுகக் கருத்துக்களை சுமார் 25 ஆண்டுகளாக நாம் இந்நாட்டிலே பரப்பி வந்திருக்கிறோம். இதே பிரச்சாரத்தை, இதைவிடசற்று வேகமாகவே, இந்துமதத்திலிருந்த சில பகுத்தறிவுபெற்ற ஞானிகள், அந்தக்காலத்திலேயேசெய்துவந்திருக்கிறார்கள் என்பதை அறியும் பொழுது வியப்பாகத்தானிருக்கிறது. ஆனாலும் அதே நேரத்தில், நமது பகுத்தறிவுப்பிரச்சாரத்தைப்பார்த்து நம்மை நாஸ்தீகர்கள் என்றுகூறும் கும்பல், இவர்களைப் பார்த்து என்ன கூறி அழைக்குமோ தெரியவில்லை!

தாங்கள் வாழ, பிறர் மாள—தாங்கள் உயர்வுபெற,பிறர் தாழ்வு பெற திட்டம் வகுத்துவரும் பிற்போக்குக் கும்பலினரான பார்ப்பனர்களின் புல்லறிவைப் பொசுக்க, தீய முறைகளைத் தீய்த்திட, பாராளும் பண்புள்ள பழங்குடி மக்களின்மீது சுமத்தப்பட்டுள்ள இழிவுகளை நீக்கிட, பழமைக் கோட்டைகளைத் தூளாக்க, அடிமைத்தனத்தைப் பொடியாக்க முதலில்,

கடவுள், விதி, கர்மம் என்று கூறி, பாராண்ட இனத்தைச்சேர்ம்பேறிகளாக்கி, பொட்டுத் தேரைகளாக்கி, முதுகெலும்பற்ற கோழைகளாக்கி மனிதர்களைச் செயலற்றுப் போகும்படி செய்து வருவதற்கு மூலகாரணமாயிருந்துவரும் புண்ணியக் கிரியைகள் போன்ற மடமைச் செயல்கள் ஒழிக்கப்படவேண்டும்—அதற்கான வழிகள் வகுப்படவேண்டும்.

இதோ!— அவைகளுக்குச் சாவோலை நீட்டி, சாவுமணியடித்துவிட்டது சுயமரியாதை இயக்கம்! இனி அவற்றைக் குழி தோண்டிப் புதைத்து சமாதி எழுப்பவேண்டியதுதான் பாக்கி!

எனவே புதுயுக இளைஞர்களே! அறியாமைக்குச் சமாதிகட்ட, அடிமைத்தனத்தைக் குழிதோண்டிப் புதைக்க, அறியாமையையும் அடிமைத்தனத்தையும் வளர்க்கிற புண்ணியக்கிரியைகள் போன்ற அறிவற்ற செய்கைகளை ஒழித்துக்கட்டுங்கள்! நாடு நலம்பெற—மக்களினம் முன்னேற இந்த நற்பணியைச் செய்யுங்கள்!

—தனமனோகரன்.


வெளிவந்து விட்டது!
வெளிவந்து விட்டது!!

பலர் நெடுநாளாய் ஆவலுடன்
கேட்டுக் கொண்டிருக்கும்
இராமாயண ஆராய்ச்சி

பாலகாண்டம்
132 பக்கம் ● எட்டு அணா.

பிரகிருதிவாதம்
அல்லது
மெட்டீரியலிஸம்
76 பக்கம் ● அய்ந்தணா.

ஞான சூரியன்
192 பக்கம் ● எட்டு அணா.

தேவைக்கு உடனே எழுதுங்கள்
வியாபாரிகளுக்கு கழிவு உண்டு.

★

—: கிடைக்குமிடம் :—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

[3ம் பக்கத் தொடர்ச்சி]

என்று சொல்ல, மகாவிஷ்ணு முதலியோர் பார்வதி வயிற்றில் கர்ப்பம் வருவதை விரும்பவில்லை', என்றனர். இதைக்கேட்ட பரமசிவன், அப்படியானால்,

ஷை பாட்டு 36.

"பனித்த முத்துருக்கி யன்ன
வெண் புனல்பருகுமின்கள்,
எனப்புகன்றருளவல்லே எரி
இறை அங்கை ஏற்றான்"

"குளிர்ந்த முத்தை உருக்கினாற்போன்ற வெண்மையான தனது இந்திரிய நீரைக் குடியுங்கள்" என்று சொல்லி வெளியே விட்டார் பரமசிவன். அதனை அந்த க்ஷணத்தில் கையை யேந்தி வாங்கினான் அக்கினி பகவான்.

ஷை பாட்டு 37.

"எண்ணறும் வருடங்காறும்
ஆயிரம் இரவிப்பொற்பின்,
அண்ணல்பால் நின்று வீழும்
அதனை அவ்வனலோன்
உண்ண,
விண்ணவர் எவர்க்கும் அந்நாள்
மேவரும் கர்ப்பம் நீட்டித்,
துண்ணெனத் துளங்க வெப்பு
நோயினில் தொடக்குண்
டார்கள்.

(பொருள்) எண்ணமுடியாத வருஷமாக ஆயிரம் சூரியனின் தன்மையைப்பெற்றுப் பரமசிவனிடத்திலிருந்து, பெருகி விழுகின்ற அந்த இந்திரியத்தை உண்டவுடன் தேவர்கள் யாவரும் கர்ப்பத்தை யடைந்தார்கள். மேலும் அதனுடைய உஷ்ணத்தைத் தாங்க முடியாமல் வெப்பு நோயினால் கஷ்டத்துக்கு ஆளானார்கள்.

பரமசிவன் பாதியில் பிரிந்து நிர்வாணமாக வந்து, தேவர் வேண்டுகோளுக்கு இணங்கி அக்கினி பகவான் கையில் இந்திரியத்தை வார்த்தார் என்றும், அதனைக் குடித்து ஆண்தேவர் எல்லாரும் கர்ப்பங்கொண்டு பிள்ளைபெற வழியில்லாமல் தயரப்பட்டார்கள் என்றும், இந்தப் படியெல்லாம் ஒரு யோகீசுவரர் எழுதலாமா?

இதனைத்தானே ஆணும், பெண்ணும் கூடியிருக்கச் செய்து கோயில்களிலும், மடங்களிலும் சாம்பல் பக்தர்கள் படிக்கின்றனர். இதனைக்கேட்கும் ஜனங்களுக்குப் பக்தியா வரும்? என்ன உணர்ச்சி வரும்? என்று யோசித்துக் கொள்ளுங்கள்! இப்படியே ஒவ்வொரு புராணத்திலும் எழுதி வைக்கப்பட்டுப் படித்துச் சுண்டல் கடலையும், வடையும் கொடுத்துக் கேட்கச் செய்கின்றனர். இராமாயணம் படித்துச் சீதாக் கல்யாணத்தன்று, தாலி செய்து கட்டி, கல்யாணத் திருவிழா நடத்துகிற மாதிரி, இந்தத் திருவிழாவையும் நடத்த முன் வராமற்போனதே சந்தோஷம் அல்லவா? இந்தத் திருவிழாவையும் கடவுள் திருவிளையாடலாகச் செய்துகாட்ட பக்தர்கள் தயாராய் இருப்பார்கள். அதற்குள் சுயமரியாதைக்காரர்கள் வந்துவிட்டார்கள். அப்படிக்கில்லாமல் இன்னும்சில ஆண்டுகள் மக்களைச் சைவர்கள் வசத்திலேயே விட்டிருந்தால், கட்டாயம் இந்த "லெவ" லுக்கு மக்களைக்கொண்டு வந்து விட்டிருப்பார்கள். ஆனாலும் இன்றும் கோவில்களில்படுக்க வீடு வைத்திருக்கிறார்கள் என்றாலும், நல்ல வேளையாய் பிள்ளை உண்டாகவில்லை.

நிற்க, நமது சிவஞான யோகீஸ்வரர் இந்த அளவோடாவது விட்டாரா? இல்லை! இல்லை!! இன்னமும் மேலே போகிறார்.

ஷை பாட்டு 40.

"சுரகரீசத்தின் பாங்கர்ச்சுரகர
தீர்த்தம் உண்டால்,
விரவிநீர் படிந்தோர் பாவவெப்பு
நோய் முழுதும் நீங்கும்,
இரவி நாட்கழிய நன்றாம் நீர்
அவண் எய்தி நம்மைப்,
பரவி நீராடில் இந்த வெப்பு
நோய் பாறும் காண்மின்"

ஷை பாட்டு 41.

"ஆயிடை நீங்கிப்பின்னர்
மேருவை அணுகி அங்கண்
மேய இக்கர்ப்பந்தன்னைவிடுமின்"

(பொருள்) காஞ்சிபுரத்தில் சுரகர தீர்த்தம் என்று ஒன்று இருக்கிறது. அதில் குளித்தவர்கள் இம்மாதிரி உஷ்ண நோயை விட்டு நீங்குதல் கூடும். நீங்கள் போய் அதில் குளியுங்கள். அப்பால் அங்கிருந்து மேரு மலைக்குச் சென்று, அங்கே உங்கட்கு உண்டாயிருக்கும் கர்ப்பத்தை விடுங்கள்" என்று பரமசிவன் சொன்னார். அப்படியே தேவர்கள் செய்தனர்.

இப்பொழுது இந்தக்கதைஎதற்காகக் கட்டப்பட்டதென்பது விளங்கும், ஒன்று, மகாவிஷ்ணு முதலிய தேவர்களைக் கேவலப் படுத்த வேண்டும் என்பது. மற்றொன்று, காஞ்சீபுரத்திலிருக்கும் சுரகரீசம் என்னும் குளத்துக்குப் பெருமை கூறவேண்டும் என்பது. இந்த இரண்டு நோக்கத்தினால் 'கடவுள் தன்மை'யையும், பகுத்தறிவையும் இழந்து மிகமிகக் கேவலமான முறையில் கதைகட்டி, கடவுள் தன்மையை, காமங் கொண்டலையும் மனிதனையும், மிருகத்தையும்விடக் கேவலமாக எழுதித் தள்ளிவிட்டார். பலநாள் தொடர்ந்து கலவி செய்வதும், கலவியின் இடையே பிரிந்து நிர்வாணமாக வந்து முப்பத்து முக்கோடி தேவர்கட்கு முன்னால் கடவுள் மானமின்றி நின்றதும், கடவுள் தன் இந்திரியத்தை தேவர்கள் கையில் வார்த்ததும், அதை தேவர்கள் வாங்கிக் குடித்ததும், இதை ஒரு யோகீசுவரர் பாடி இருப்பதும் கவனிக்கத்தக்கது. இந்தப்பரிதாபகரமான புராணங்களைப்பற்றிக் குறை சொல்லாமல் எப்படியிருக்க முடியும்? இதைப் படித்த ஒருவன், கடவுள் திருவாக்கென்று எப்படிப் பொறுக்க முடியும்? பத்து சைவப் பெண்களை வைத்துக்கொண்டு, இந்தப் புராணத்தை ஜனங்களுக்குப் படித்துக் காட்டினால் எப்படி இருக்கும்? இப்படிப்பட்ட புராணங்களை வைத்துக் கொண்டு "புராணங்கள், கடவுள் வாக்குகள்; ஒன்றையும் பொய்யென்று சொல்லாதே! அதன் கதைகளை ஆபாசமென்றால் உடனே பாபம் வரும். அவற்றை மறுத்துச் சொல்பவன் நாஸ்திகன்! ஆவான்; அவன் பேச்சைக் கேளாதே" என்று சொல்லும் சைவப்பண்டிதர்களின் கூற்று யோக்கியமானதா? என்று கேட்காமலிருக்க முடியுமா? எத்தனை நாளைக்குத்தான இந்த நாற்றத்தைக்கட்டியழுவது?

இந்தப் புராணத்தைத்தான் தமிழில் பாடும்படி, காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் சிவஞான யோகீசுவரருக்குச் சொல்லியருளினாராம்! கருச்சிதைக்கிற படலத்தையும், கருச்சிதைக்கிற குளத்தையும்பற்றிக் "கடவுள்" எதற்காகப் புராணம் பாடச்சொன்னார் என்பது யோசிக்கத்தக்கதல்லவா?

விதவைகளுக்கு விவாகமில்லாமற் செய்துவிட்டதால், அவர்கள் ஒரு சமயம் கர்ப்பம் அடைந்தால்

இந்தத் தீர்த்தத்தில் மூழ்கி அழித்துக்கொள்ளட்டும் என்பதற்காகவா? சிவபக்தர்கள் செய்யும் விபசார தோஷத்தால் ஏற்படும் கர்ப்பங்களை அழிக்க வசதியாக இருக்கட்டும் என்றா? இவைகளையெல்லாம் சிறிது பகுத்தறிவைக் கொண்டு பார்த்தால், கடவுள் பேரால் எவ்வளவு பித்தலாட்டங்களும், கொடுமையும், அசிங்கமும் நாட்டுக்கு இழைக்கப்பட்டிருக்கின்றன என்பது விளங்கும். இவற்றை ஒழிக்கவேண்டும் என்று சொன்னால் பண்டிதர்களும், சிவபக்தர்களும் சீறி விழுவதில் என்ன பிரயோசனம்? இதைப்பார்த்த வேறு மதக்காரர்கள், நம்மை இழிவாகக் கருதுகிறார்கள் என்று சொன்னால், "அவர்கள் மதத்திலும் இப்பேர்ப்பட்ட ஆபாசமும், அசிங்கமும் இருந்த வரவில்லையா" என்று சொல்லி அவற்றிலும் இரண்டு துர்நாற்றங்களைக்காட்டிவிட்டால் நமது மதமும், கடவுளும் வாசனை பெற்றுவிடுமா என்று கேட்கிறேன்.

சைவர்கள் இதற்கு ஏதாவது தத்துவார்த்தம் இருந்தால் வெளிப்படுத்துவார்களாக.

---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வருங்கீதம்" என பண்ணிசைக்கிறாள் கிரிதரனை நினைந்து.

கணவன்மாரை வெறுத்தொதுக்கும் பாடத்தைத்தான் மீரா படம் நாட்டு மக்களுக்குப் போதிக்கிறது.

பக்த மீரா படக்காட்சியைப் பார்த்து விட்டு வரும் பாவை பாதி ராத்திரியிலே தன் பதியிடம் பாசமொழி பேசமாட்டாள்...பக்கத்து வீட்டுப் பள்ளி மாணவன்—பாலுவை எண்ணி "என் மணாளா—நந்த பாலா" என்றுதான் அவள் இதழ்கள் இன்னிசை பொழியும்!

இந்த விபரீத உண்மையை மீரா படத்தக்கு வசனம் எழுதிய கல்கி இப்பொழுதுதான் உணர்ந்திருக்கிறார் போலும், அதனால்தான் தீங்கு விளைவிக்கும் பக்திப்படத்தைத் தடை செய்யும்படி சர்க்காரை வேண்டுகிறார்.

"பிள்ளையார் பிடிக்கக் குரங்கான்னா முடிஞ்சுடுத்து! ஏதோ நம்மளவா வேலைக்காரியைப் பத்தி எழுதியிருக்கானா, அந்தப் படத்துக்குச் சர்க்காரைத்தடைபோடச் சொல்லி திட்டி எழுதியிருப்பானு நேக்குத்தோணுச்சு-ஆனா இந்தப் பாழாய்ப்போன கிருஷ்ணமூர்த்தி நம்மளவா பிழைப்புக்கே வெடி வச்சுன்னா எழுதிட்டான்" என்று கனபாடிகள் கல்கியின்மீது காய்வர் என்று அவருக்குத் தெரியும்.

இது தெரிந்தும் அவர் புராணப் படத்துக்குத் தடை போடவேண்டுமென்று வேண்டுவதன் காரணம் ...தான் வசனம் எழுதிய மீரா புராணப்படம் அறிவு வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது என்பதை அவர் உணர்வதுதான்.

இத்தனை நாள் கழித்தாவது உண்மையை உணர்ந்தாரே அதே போதும்!

அவசரப்பட்டுக் காரியமாற்றும் சிலரில் கல்கியும் ஒருவர். அதனால் தான் மீரா படம் எடுத்த போது, இது நாட்டுக்கு நலன் தாராது என நாம் கூறிய போது—நம்மைப் பார்த்து எள்ளி நகையாடினார். ஆனால் காலப்போக்கிலே உணர்ந்து விட்டார்.

இம்மாதிரி நிலைமையில் சிக்கிக் கொள்பவர்கள் கல்கிமட்டுமல்ல—பலருந்தான். யாரார் நம்முடைய கருத்துக்களை எதிர்த்துப் பேசுகிறார்களோ அவர்களெல்லாம் காலப்போக்கில் நாம் கூறிவந்த கருத்தையே கூறும் நிலை ஏற்பட்டுவிடுகிறது.

ஒரு சமயம் கும்பகோணத்திலே மகாமகம் நடந்து கொண்டிருந்தது. அந்த மகாமகக் காட்சியைப் புகைப்படமெடுத்து தனது பத்திரிகை முகப்பிலே போட்டு, "அட்டையில் பார்த்தீர்களா மகாமகத்திற்கு எவ்வளவு கூட்டம் என்று. சுனா மானாக்கள் விடிய விடியப் பிரச்சாரம் செய்கிறார்களே என்ன பயன்" என்று வேடிக்கை பேசினார் கல்கி!

ஆனால் அதே கல்கி இன்று பத்திரிகைகளில் படித்திருக்கலாம் ...சுவாமியைத் தூக்க ஆள் இல்லை; சுவாமியைத்தான் தூக்குவோம் ஆசாமியையும் சேர்த்துத் தூக்கமாட்டோம்; இவ்வருடம் தேரோட்டமில்லை!.......என்பன போன்ற செய்திகளை!

கல்கி செய்த பிரச்சாரத்தைப் போல நாம் செய்ய வெகுநேரம் ஆகிவிடுமா!

சாமி கீழே இறக்கி வைக்கப்பட்டிருக்கும்; அய்யர் கெஞ்சுவார் சாமியோடு என்னையும் சேர்த்துத் தூக்கு என்று. சாமியைத் தூக்கும் ஆள் கோபத்தோடு பேசுவான்...தாங்கள் ஏறினால் நிச்சயம் தூக்க முடியாது என்று!

இந்தக் காட்சியைப் புகைப்படமாக எடுத்து நம் ஏடுகளிலே வெளியிட வெகு நேரம் பிடித்து விடுமா? ஏன் இந்தக் காரியத்தை நாம் செய்தோமில்லை.

நாம் கல்கி போன்று ஆத்திர புத்தி படைத்தவர்களல்ல. என்றாவது ஒரு நாள் நாம் கூறும் கருத்து மக்களின் உள்ளத்திலே உல்லாச நடைபோடும் என்பது நமக்கு அப்பொழுதே தெரியும். ஆகவேதான் கல்கி மகாமகக் காட்சியை அட்டையிலே போட்டு ஆனந்தப் பட்டுக்கொண்டிருந்த போது—நாம் அதுபற்றி அலட்சியமாகவே இருந்தோம்.

கல்கி, பக்திப்படம், நாட்டு மக்களை கேட்டுக்கு இழுக்கிறது என்பதை எப்படி உணர்ந்தாரோ அது போல இந்தக் கருத்தையும் உணர வேண்டும்.

அந்த உணரும் சக்தி கல்கியிடம் உடனே வந்துசேர்வதில்லை... இதனால்தான் பக்திப்பட விஷயத்தில்கொண்ட புரட்சி எண்ணம் "காளியின் கருணை"யிலும் கொண்டு கட்டுரை தீட்டியிருந்தால்—அவரது கருத்து இவ்வளவு தூரம் நம் கேலிக்கு ஆளாகும் நிலை ஏற்பட்டிருக்காது.

கல்கியின் நிலை இம்மட்டோடு முடியவில்லை!

மாடிவீடுடையான்—மாட்டுக் கொட்டத்தில் படுத்துறங்குவதைப்போல, உண்மையை உணரும் சக்தி கல்கிக்கு இருந்தும் சில சமயங்களிலே உண்மைக்கும் எனக்கும் நெடுநாள் பகை என்று கூறும் முறையிலே தன்னையே மறந்து பேசுகிறார்.

"பூணூலையும் உச்சிக்குடுமியையும், நாமத்தையும், திருநீற்றையும், சந்தனப்பொட்டையும் பற்றிப் பேச்சிலும் எழுத்திலும் சக்கை போடு போடட்டும். ஆனால் வைதீக நம்பிக்கையுள்ள ஓர் ஏழைப் பிராமணரின் பூணூலை அறுக்கவோ, ஒரு பக்தரின் நாமத்தையும் விபூதியையும் அழிக்கவோ யாரேனும் முற்பட்டால் அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கும் சர்க்கார் சர்க்காரே அல்ல!;'

என்று தனது கட்டுரை வரிசை

ரோஜா முத்தையா

யிலே கீழ்ப்பாக்க நாதர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

திராவிடர் கழகத்தார்மீது இந்தக் குற்றத்தைச் சுமத்தும் கல்கி தன்னைத்தானே புரிந்து கொள்ளவில்லை என்றுதான் நாம் முதலில் அவர்மீது குற்றம் சாட்டுகிறோம்.

பேச்சிலும் எழுத்திலும் சக்கைப்போடு போடட்டும் என்று கூறும் கல்கி, தாம் கூறிய அதே கருத்தை அவர் நடைமுறையில் காட்டுகிறாரா எனக்கேட்கிறோம்!

கல்கி—சுந்தரகோசாக மாறாது பதில் கூறட்டும்.

சில நாளைக்கு முன்பு—திராவிடர் இயக்க அனுதாபி என்பதற்காக ஒரு சிலரைத் தனது அலுவலகத்திலிருந்து வேலையைவிட்டு நீக்கினாரே—இந்த நிகழ்ச்சியைக் கல்கி தன் மனக்கண்ணிலே ஓட விட்டுப் பார்க்கட்டும்.

என்-எதற்காக அவர்களை நீக்கினார்! தாம் இன்று கூறும் பேச்சிலும் எழுத்திலும் சக்கைப்போடு போடும் முறை அன்று எங்கு போய் விட்டது.

சூது புரிந்த சுந்தரகோஷ் விழித்து நின்றதைப் போலதான் கல்கி நிற்பாரே தவிர வேறு என்ன சமாதானம் கூற முடியும் இதற்கு.

இதற்குள் மறந்திருக்க முடியாது நண்பர் கல்கி....மதுரை தீபற்றிஎரிந்த சம்பவத்தை.மதுரை தீப்பற்றி எரிந்த சம்பவம்-என்றவுடனே நண்பர் கல்கி சிலப்பதிகாரத்தைப் புரட்டிவிடக் கூடாது. நாம் கூறுவது கண்ணகி மதுரையை எரித்த சம்பவமல்ல—கருஞ்சட்டையினர் பந்தலுக்கு வைத்தியநாதர்கள் தூண்டுதலால் தீவைக்க அது பற்றி எரிந்த சம்பவத்தையே கூறுகிறோம்.

எந்த வைகையாற்றுக்கரையில்-பாண்டியன் படை வீரர்கள், வேலும் வில்லுந்தாங்கி உலவினார்களோ அதே வைகையாற்று மணலில் நாம் இரத்தஞ்சிந்தினோம்!

நிரபாதியைக் கள்வனென்று கூறிய நீயோ கொற்றவன்—நீயோ குடிநலம் பேணும் மன்னன்—உன்னையும் அரசனென இந்த அவை ஏற்கிறதா!......என்று கண்ணகி வீரம் பேசிய அதே ஆலவாயில் தான், நமது தோழியர்கள் மானங்காக்க இடந்தேடினர்.

நாம் அன்று வைகை ஆற்று மணலில் சிந்திய—இரத்தம்!

நம் தோழியர்கள் பட்ட—இன்னல்! கண்ணகி எரித்த மதுரையோ என...தீப்பற்றி எரிந்த—பந்தல்!

இவற்றை நாம் எண்ணும் போதே.........நம்மையுமறியாமல் இரத்தச் சிவப்பேறுகிறது கண்கள். உடலிலேபுதுவேகம்தோன்றி உள்ளத்திலே வஞ்சகர்களுக்குப் பாடம் கற்பிக்கவேண்டுமென்ற எண்ணம் மின்னுகிறது.

ஆனால் அடுத்த வினாடியே வெண்தாடி உருவம் நம் கண்முன் வட்டமிட்டுஎச்சரித்து மறைகிறது. ஆகவே நாம் வஞ்சகத்தை வஞ்சகத்தால் தாக்கும் திட்டத்தைக் கைவிட்டுவிடுகிறோம்.

இந்த முறையிலே நம் பணி அமைந்திருக்க வைத்தியநாதர்களுக்குக் கைலாகு கொடுக்கும் கல்கி...பேச்சிலும் எழுத்திலும் சக்கைப்போடு போடுங்கள் ஆனால் பிராம்மணரின் பூணூலை அறுக்கவோ, பக்தர்களின் பட்டையை அழிக்கவோ முனைந்தால் இதைப் பார்க்கும் சர்க்கார் சர்க்கார் அல்ல.........என்று ஏன் எழுத வேண்டும்.

குற்றம் புரிந்தவர்கள் அவர்களாய் இருக்க நம்மீது சர்க்கார் பாயவேண்டுமென்று ஏனோ அவர் எழுதுகிறார். எந்தப் பார்ப்பனரின் பூணூலை நாம் அறுத்தோம் அல்லது அறுக்க முயன்றோம் என்று கல்கி ஆதாரத்தோடு கூறுவாரா! வேண்டுமானால் விடுதலை நிலையத்துக்குத் தன் கையாலேயே பூணூலை அறுத்து அனுப்பிய பார்ப்பனரைக் காணமுடியுமே தவிர—கழகத் தோழன் கையினால் பூணூல் அறுபட்ட பார்ப்பனரையோ—பட்டை அழிக்கப்பட்ட பக்தரையோ காணமுடியாது என்பதைச் சூது செய்து வாதுக்கழைக்கும் இந்த சுந்தர கோஷ்களுக்கு அறிவிக்க விரும்புகிறோம்.

...இறுதியாகப் பார்க்கும்போது இதுவரை கல்கி தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ள செய்திகள் ஒன்றிலாவது கருத்துத் தெளிவு இருப்பதாகக் கண்டோமில்லை!

கல்கியின் கருத்துத் தெளிவு இவ்வளவு வெள்ளையாக இருக்க கட்டைச் சாரீரமும், மட்ட நடிப்பும் கொண்ட நடிகன் ராஜபார்ட்டாகத் தோன்றுவதுபோல...... எழுத்தாளர் கூட்டங்களிலே "பேனாத் தளபதி"யாக இவர் உலவுகிறார்!

உலவட்டும் நன்றாக—எழுத்தாளர் விழிக்கும்வரைதானே இந்த உலா.

இவ்வளவு நேர விளக்கத்துக்குப் பிறகுதான் நாம் கல்கியைப்பற்றிய ரகத்தை முடிவுகட்டவேண்டியவர்களாக இருக்கிறோம்!

"இலை மறைந்த காயைப்போல் இருப்பார் சிலபேர்—

எல்லாம் தெரிந்த மனுசர்போல ஏய்ப்பார் சிலபேர்"

என்ற இரண்டு ரகங்களில், இரண்டாவது ரகத்தைத்தான் கல்கி எட்டிப் பிடிக்கிறார்!

உண்மைதானே—இந்த உலகம் பலவிதம் அதிலே கல்கியும் ஒரு விதந்தானோ!

—தங்கவேலர்

---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

என்னதான் வழி?

தீமையைச் செய்தவன் மன்னிப்புப் பெற்றோ, தண்டனை அடைந்தோ, தன் செய்கைக்குப் பரிகாரம் பெற்றுக்கொள்ளுகிறான் என்றே வைத்துக்கொள்வோம்.

தீமையை அடைந்தவனுக்கு இந்தக்கடவுள் என்ன பரிகாரம் செய்கிறார் என்பது விளங்கவில்லை.

தீமையை அடைகின்ற மனிதன் கடவுள் சித்தத்தால்தான் தீமை அடைகிறான் என்றுதானே சொல்லவேண்டும்? அப்படியில்லாவிட்டால், கடவுளின் காவலைமீறி, ஒரு மனிதனுக்கு ஒரு மனிதன் தீமை செய்துவிடமுடியுமா?

ஆகவே கடவுள் சித்தத்தால் ஒரு மனிதன் தீமையை அடைகிறான் என்றால், பிறகு தீமை செய்தவனுக்குத் தண்டனை எப்படி வரும்? அவன் எதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும்?

கடவுள் சித்தமில்லாமல், தனிப்பட்ட முறையில், தன் சொந்தத்தில் ஒரு மனிதன் ஒரு காரியத்தை ஒருவருக்குச் செய்துவிட முடியுமா?

கடவுள், மனிதன் மூலமாகவே தன்னுடைய ஆட்சியை நடத்துகிறார் என்பதே பெரும்பித ஆஸ்திகர்கள் முடிவு. அதனாலேயே பிச்சை பெற்றவனும், கட

வுள் கொடுத்தார் என்று சொல்லுகிறான். உத்தியோகம்பெற்றவனும் கடவுள் கொடுத்தார் என்று சொல்லுகிறான். உதவிபெற்றவனும், கடவுள் கொடுத்தார் என்று சொல்லுகிறான். ஏதாவது ஒரு கூட்டத்தில் நெருக்கடியில் இருந்து தப்பித்துக்கொண்டவனும், கடவுள் தப்பித்துவிட்டார் என்று சொல்லுகிறான்.

ஆகவே எந்த நன்மைக்கும், தீமைக்கும் மனிதன்மீது பொறுப்பைச் சுமத்துவது எப்படிமுடியும்?

அன்றியும் கடவுள் சர்வவியாபியாய் இருக்கும்போதும், மனிதனுடைய ஒவ்வொரு எண்ணங்களையும், காரியங்களையும் கவனித்துவருகின்றவராய் இருக்கும்போதும், மனிதனுக்குத் தனிப்பட்ட பிரார்த்தனை எதற்கு? அதற்காக இடம், பொருள், நேரம் எதற்காகச் செலவுசெய்ய வேண்டும்?

அவர் தெரிந்துகொள்ள முடியாத எந்தக் காரியத்தைப் பிரார்த்தனையினாலும், ஜபத்தினாலும், தொழுகையினாலும் அவருக்கு அறிவிக்க முடியும்? பிரார்த்தனைக்கும், ஜபத்துக்கும் இரங்குகிறவர் என்றால், கடவுள் தற்பெருமைக்காரரா-அல்லது பிரதிப்பிரயோஜனம்பெறும்வியாபாரமுறைக்காரரா?

இவ்வளவுகாலப் பிரார்த்தனையும், ஜபமும், தொகையும் மனிதனை ஏதாவது ஒரு வழியில் யோக்கியமாய் நடப்பதற்குப் பயன்பட்டிருக்கின்றவா?

நன்மைக்கும், தீமைக்கும் கடவுளே கர்த்தராய் இருக்கும்போது உலகில் நன்மை, தீமை இல்லாமல் இருக்கச் செய்யமுடியாதா? அதை எவராவது சில மக்கள் அடைந்துதான் தீரவேண்டுமா?

அன்றியும் நமது பிரார்த்தனையும், தொழுகையுமாவது நமக்குத் தீமை அணுகாமல் செய்யமுடியுமா? அப்படிச் செய்தாலும், அத்தீமை உலகில் உள்ளவரை ஏதாவது ஒரு மனிதனையாவது அணுகித்தானே தீரவேண்டும்?

ஆகவே மனித சமூகம், பொதுவில் தீமையில் இருந்து எப்படித் தப்ப முடியும்?

தீமையினால் மக்கள் கஷ்டப்படுவார்கள், துன்பப்படுவார்கள் என்பதைக் கடவுள் அறிந்திருக்கமாட்டார் என்று யாராவது நம்ப முடியுமா?

அப்படி இருக்கும்போது, சர்வ சக்தியும், சர்வ தயாபரத்தன்மையும்கொண்ட கடவுள், உலகத்துக்குத் தீமையை ஏன் சிருஷ்டித்தார்?

விஷப்பூச்சி, விஷக்கிருமி, விஷ ரோகம், தரித்திரம், துன்பம், கொலைத்தொழில், கொள்ளைத்தொழில், திருட்டு, பொய், வஞ்சகம், விவசாரம், கஷ்டமான வேலை, அடிமைத்தனம், கொடுங்கோல் ஆட்சி, ராஜத்துரோகப் பிரஜைகள், கடவுளை மறுப்பது, கடவுளை வைவது, முதலாகிய தீமை என்னும் விஷயங்களையெல்லாம் கடவுள் ஏன் சிருஷ்டித்தார்?

இவற்றால் யாராவது ஒருவர் கஷ்டப்படுகிறாரா — இல்லையா? இவற்றால் கடவுளுக்கு என்ன லாபம்?

பூகம்பம், எரிமலை வெடிப்பு, புயல் காற்று, கடு மழை ஆகிய காரியங்களை ஏன் சிருஷ்டித்தார்?

கெட்ட மனிதர்கள் துன்பமனுபவிக்க என்று சொல்லப்படுமானால், கெட்ட மனிதர்களை ஏன் சிருஷ்டித்தார்?

நல்ல மனிதன், கெட்ட மனிதன் என்று சொல்லமுடியாத குழந்தைகள், மற்ற ஜீவன்கள் ஆகியவைகளுக்கும் துன்பம்அடையும்படி ஏன் செய்தார்?

இவைகளுக்கெல்லாம் சர்வ சத்தியும், சர்வ வியாபகமும், சர்வ தயாபரத் தத்துவமும் உடைய ஒரு கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்து நடத்திவருகிறார் என்று சொல்லும் ஆஸ்திகன் என்ன சமாதானம் பதில் சொல்லக்கூடும்?

இந்தக் கேள்விகள் வெகுகாலமாகவே இருந்து வருகின்றன என்று பதில் சொல்லி விட்டால் போதுமா?

---

## கவனிக்க.

புத்தகங்களுக்கு ஆர்டர் அனுப்புவோர், முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. 3-ரூபாய்க்கு உட்பட்ட ஆர்டராயிருந்தால், ஆர்டருக்குரிய முழுத் தொகையையும் செலவுத் தொகையையும் முதலிலேயே அனுப்பிவிடவேண்டும். 3-ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டராயிருந்தால், நாலில் ஒரு பங்காவது முன்னால் அனுப்பிவிட வேண்டும். இப்படி முன்பணம் அனுப்பாத ஆர்டர்கள் நிச்சயமாகக் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர், குடி அரசு, ஈரோடு


## நம்மிடம் கிடைக்கும் வேறு நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| ○ அழகின் சிரிப்பு | 1 | 0 | 0 |
| ○ தமிழ் இயக்கம் | 1 | 0 | 0 |
| ○ முல்லைக்காடு | 0 | 12 | 0 |
| ○ நல்லதீர்ப்பு | 0 | 10 | 0 |
| ○ கவிஞர் பேசுகிறார் | 0 | 10 | 0 |
| ○ குடும்பவிளக்கு II | 0 | 6 | 0 |
| ரோமாபுரி ராணிகள் | 2 | 4 | 0 |
| கம்பரசம் | 1 | 8 | 0 |
| குமரிக்கோட்டம் | 1 | 0 | 0 |
| விடுதலைப்போர் | 1 | 0 | 0 |
| கற்பனைச்சித்திரம் | 1 | 0 | 0 |
| சிறுகதைகள் | 1 | 0 | 0 |
| ஆரியமாயை | 1 | 0 | 0 |
| உலக பெரியார் காந்தி | 1 | 0 | 0 |
| ரேடியோவில் அண்ணா | 0 | 12 | 0 |
| வர்ணாஸ்ரமம் | 0 | 12 | 0 |
| திராவிடர் நிலை | 0 | 6 | 0 |
| நல்ல தீர்ப்பு | 0 | 4 | 0 |
| மகாத்மா காந்தி | 0 | 3 | 0 |
| போர்வாள் | 1 | 4 | 0 |
| தீண்டாமை | 1 | 8 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 1 | 0 | 0 |
| சிறந்த பேச்சாளர் | 1 | 0 | 0 |
| நரகாசுரப் படுகொலை | 0 | 12 | 0 |
| கனவில் கண்ட கவி | 0 | 10 | 0 |
| சாவோலை | 0 | 8 | 0 |
| நாடக கலையின் முன்னேற்றம் | 0 | 6 | 0 |
| சிரிக்கும் வையம் | 0 | 4 | 0 |
| வாழ்விலோர் திருநாள் | 0 | 4 | 0 |
| மக்களாட்சி | 0 | 4 | 0 |
| எப்படி உருப்படும்? | 0 | 4 | 0 |
| நாசகார சமூகம் | 0 | 8 | 0 |
| சுதர்திட்டம் வெற்றி பெறுமா? | 0 | 10 | 0 |
| காதல் பிறந்தது | 0 | 6 | 0 |
| இராவணன் | 1 | 12 | 0 |
| ஐக்கிய திராவிடம் | 0 | 12 | 0 |
| ராதை சிரித்தாள் | 0 | 6 | 0 |
| மதம் பிடித்த படாதிபதிகள் | 0 | 4 | 0 |
| அதிகார போதை | 0 | 6 | 0 |
| நானா விபசாரி | 0 | 6 | 0 |

கிடைக்குமிடம்:-
குடி அரசு, ஈரோடு.


அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம் 59, கச்சேரி வீதி, ஈரோடு.